**பாரதியார்**

- ஊர் (தூத்துக்குடி) எட்டயபுரம்
- வேறுபெயர் - தேசியக்கவி, விடுதலைக்கவி, மகாகவி, மக்கள் கவி, பாட்டுக்கொரு புலவன்,'புதுக்கவிதையின் தந்தை' ,'தற்கால தமிழிலக்கியத்தின் விடிவெள்ளி' நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா
- இதழ்கள் - சுதேசமித்ரன், இந்தியா
- இயற்றிய நூல்கள்- புதிய ஆத்திசூடி, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம், ஞான ரதம், சந்திரிகையின் கதை, தராசு, திண்டிய சாஸ்திரி சொர்ண குமாரி, வேதாந்த பாடல்கள், விநாயகர் நான்மணிமாலை

**மேற்கோள்கள்:-**

- 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் தந்த தமிழ்நாடு'
- நல்லதோர் வீணை செய்தே – அதை நலங்கெடப்<br>புழுதியில் எறிவதுண்டோ'
- 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதானது எங்கும் காணோம்'
- மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'
- 'தனியொருவனுக் குணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'
- 'நெஞ்சு பொறுக்கு திலையே'
- 'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'
- 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்'
- 'காக்கை சிறகினிலே நந்தலாலா'
- காக்கை குருவி எங்கள் ஜாதி'
- 'காதல், காதல், காதல்'
- 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'
- 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்'
- 'கொட்டு முரசே கொட்டு முரசு'
- 'எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும்'
- 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்'
- 'பெண் விடுதலை வேண்டும்'
- 'கல்வி சிறந்த தமிழ் நாடு'
- 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'
- 'பாரத பூமி பழம்பெரும் பூமி நீரதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்'
- 'தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத் தீயை வளர்ப்பவர் மூடர்'
- 'நாடும் மொழியும் நமதிரு கண்கள்'
- "தண்ணீர்விட்டோ வளர்த்தோம், கண்ணீரால் காத்தோம்"

**பாரதிதாசன்:-**

- ஊர் - புதுச்சேரி
- இயற்பெயர் - கனகசுப்புரத்தினம்
- வேறுபெயர் - பாவேந்தர், புரட்சிக் கவிஞர், இயற்கைக்கவிஞர், புதுமைக்கவிஞர்
- இதழ் ஆசிரியர் - புதுவை முரசு, முல்லை, குயில்

**இயற்றிய நூல்கள் :-**

பாரதிதாசன் கவிதைகள், பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இளைஞர் இலக்கியம், அழகின் சிரிப்பு, தமிழ் இயக்கம், மணிமேகலை வெண்பா, இசையமுது, கண்ணகி புரட்சி காப்பியம், பிரிராந்தையார், தமிழச்சியின் கத்தி, குறிஞ்சி திரட்டு, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், சௌமியன், கலை கூத்தின் காதல்

**மேற்கோள்கள்:-**

- 'புதியதோர் உலகம் செய்வோம்'
- 'ஓடப்பர் உயரப்பர் எல்லாம் ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ'
- 'இருட்டறையில் உள்ளதடா உலகம்'
- 'நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம்'
- 'மதங்கள் மக்களின் மாற்று சட்டைகள்'
- 'தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்'
- 'தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'
- 'கொலை வாளினை எடடா<br>வெகு கொடியோர் செயல் அறவே'
- 'பாரடா உன் மானிட சமுத்திரத்தை'
- 'உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே'
- 'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டின்<br>மண்ணடிமை தீந்தல் முயற் கொம்பே'

**நாமக்கல் கவிஞர்:-** (வெ. இராமலிங்கனார்)

- ஊர் - மோகனூர் (நாமக்கல்)
- வேறுபெயர் - காந்தியக் கவிஞர், தேசியக்கவிஞர், ஆஸ்தான கவிஞர்
- தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர்
- எழுதியவை – உரைநடைகள், புதினங்கள், கவிதைகள்
- 'பலே பாண்டியா' எனப் பாரதியாரால் அழைக்கப்பட்டவர்

**படைப்புகள்:-**

NATRAJ INSTITUTE OF TNPSC

1. **கவிதைகள்:-** தமிழன் இதயம், சங்கொலி, தமிழ் மணம், தமிழ்த்தேன், கவிதாஞ்சலி, காந்தி அஞ்சலி, தமிழ் வேந்தன்
2. **நாவல்கள்:-** மலைக்கள்ளன், கற்பகவல்லி, காதல் திருமணம், அன்பு செய்த அற்புதம்
3. **கதைப்பாட்டு:-** அவனும் அவளும்
4. **நாடகம்:-** மாமன் மகள், அரவணை சுந்தரம்
5. **உரைநடைநூல்கள்:-** என்கதை, இசைத்தமிழ், கம்பரும் வால்மீகியும்
6. **உரைநூல்** - திருக்குறள் புது உரை
7. **மொழிபெயர்ப்பு:-** காந்திய அரசியல்

**மேற்கோள்கள்:-**

- 'தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா'
- 'புரட்சி வேண்டும் புரட்சி வேண்டும் புரட்சி வேண்டுமடா'
- 'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அதற்கோர் குணமுண்டு'
- 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்'
- 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'
- 'சத்தியம் நம்மிற் குறைந்ததால் - பல சங்கடம் வந்து நிறைந்ததே'
- 'கூட்டுறவில் சேருங்கள் கூடிவாழ பழகுங்கள்'

**கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை:-**

- ஊர் - தேரூர் (கன்னியாகுமரி)
- வேறுபெயர் - கவிமணி சிறந்த குழந்தைக் கவிஞர்
- **நூல்கள்:-** மலரும் மாலையும், இளந்தென்றல், பசுவும் கன்றும், குழந்தைச் செல்வம், மருமக்கள் வழி மான்மியம், உமார் கய்யாம் பாடல்கள், ஆசிய ஜோதி

**மேற்கோள்கள்:-**

- 'மங்கையராய்ப் பிறப்பதற்கே – நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'
- 'தோட்டத்திலே மேயுது வெள்ளைப் பசு'
- 'உள்ளத்திலுள்ள கவிதை - இன்ப உருவெடுப்பது கவிதை'

## கவிதைகள்

உள்ளத்து உணர்ச்சிகளைச் தெளிவாகவும், சுருக்கமாகவும் சொல்வது.

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை –"உள்ளத்துள்ளது ……. கவிதை"

**வகைகள்:-** மரபுக்கவிதை, புதுக்கவிதை

**மரபுக்கவிதை:-**

- யாப்பு இலக்கணம் கொண்டு அமைந்தது. எழுத்து, அசை, சீர், தலை, அடி, தொடை இலக்கண உறுப்புகளால் கட்டப்பட்டது.
- வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஏதேனும் ஒன்றில் பாடப்படும்
- துளை, தாழிசை, விருத்தம் பாவினங்களிலும்
- சங்க இலக்கியங்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்
- எதுகை மோனை இயல்பு தலைதட்டித் தன்மையும் அவசியமானவை

**எடுத்துக்காட்டு:-** பிற்காலத்தில் தெம்மாங்கு, சிந்து, கண்ணி முதலிய சந்தங்களில் பாடப்பட்டுள்ளது

பாரதியார் நடிப்புச் சுதேசிகள் தலைப்பில் கிளிக்கண்ணிகள் சந்தித்தில்

'நெஞ்சில் உரமுமின்றி நேர்மை திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி – கிளியே
வாயிச்சொல்லில் வீரரடி'

## புதுக்கவிதை

**மணிக்கொடிக் காலக் கவிதைகள்:-**

- பாரதியின் வசனகவிதைத் தாக்கத்தால் புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி ஆகியோர் வசன கவிதை எழுதினர்
- பழமை(மரபு), புதுமை ஆகிய இரண்டையும் இணைத்துக் கவிதை எழுதியவர் புதுமைப்பித்தன்
- இந்திய தேசிய விடுதலை பற்றிய கருத்தாக்கத்தை(உழஉநிவ) இலக்கியத்தின் மூலம், இலக்கிய விடுதலை மூலம் எடுத்துச் சொல்லிய காலம் மணிக்கொடி காலம்
- மணிக்கொடிக் காலக் கவிஞர்கள்: ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா, கு.ப.ரா.
- ந. பிச்சமூர்த்தியின் 'சாரன் கடுஞ்சினத்தில் பூமோகம் ஆடவில்லை' என்ற கவிதையின் கட்டமைப்பை விளக்கலாம்

**முடியரசன்**

- இயற்பெயர் துரைராசு, தேனி மாவட்டம் பெரியகுளம், ஊன்றுகோல் நெஞ்சு பொறுக்குதில்லையே

NATRAJ INSTITUTE OF TNPSC

- நூல்கள்: பூங்கொடி, காவியப் பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள், மனிதனைத் தேடகிறேன்
- கவியரசு என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பெற்றது
- பூங்கொடி என்னும் காவியத்துக்காக 1966-இல் தமிழக அரசு பரிசு

**வாணிதாசன்:-**

- இயற்பெயர் எத்திராசலு (எ) அரங்கசாமி, புதுவையை அடுத்த வில்லியனூர்
- வேறுபெயர் - கவிஞரேறு, பாவலர்மணி, தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்
- நூல்கள்: குழந்தை இலக்கியம்

**சுரதா:-**

- பாரதிதாசனின் மேல் கொண்ட பற்றினால் அவரது இயற்பெயரான சுப்புரத்தினம் என்பதை அடியொற்றி (சுப்புரத்தின தாசன்) சுரதா என மாற்றிக் கொண்டார்
- நூல்கள்: தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும் சுரதாவின் கவிதைகள்
- இயற்பெயர் - இராசகோபாலன், ஊர் தஞ்சையில் பழையனூர்
- தேன்மழை நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசு
- தமிழக இயலிசை நாடக மன்றத்தின் கலைமாமணி பட்டம், தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றுள்ளார்
- வேறு பெயர்:- உவமைக் கவிஞர்

**கண்ணதாசன்:-**

- சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிறுகூடல்பட்டி
- கண்ணதாசன் கவிதைகள் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன, திரைப்படப் பாடல்கள் நூல் வடிவம் பெற்றுள்ளன
- ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மாகாவியம், இயேசு காவியம் முதலியன அவர் படைத்த நெடுங்கவிதை நூல்கள்
- இராசதண்டனை என்பது கம்பர் - அம்பிகாபதி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அவர் படைத்த இனிய நாடகம்
- புதினங்கள் - ஆயிரம் தீவு அங்கயற் கண்ணி, வேலங்குடித் திருவிழா, சேரமான் காதலி சிறந்த வரலாற்றுப் புதினமாகும். சாகித்ய அகாதமியின் பரிசு கிடைத்துள்ளது.
- இதழ்கள் - தென்றல், முல்லை கண்ணதாசன், தமிழ் மலர்
- கவிதையிலும் உரைநடையிலும் சொற்பொழிவிலும் திரைப்படத் துறையிலும் தமக்கென ஒரு புதிய வழி

**உடுமலை நாராயண கவி**

- தமிழ்த் திரைப் பாடல் ஆசிரியரும், நாடக எழுத்தாளர்
- பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பியவர்
- வேறுப்பெயர் - பகுத்தறிவுக் கவிராயர்

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்:-**

- வேறுபெயர்:- மக்கள் கவிஞர், எளிய தமிழில் கவிதைகளை இயற்றினார்
- திரையிசைப்பாடல்கள், பொதுவுடைமை சிந்தனைகளை தமது பாடல்களில் எழுதினார்
- ஊர் - பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு

**மருதகாசி:-**

- ஊர் - அரியலூர் திருச்சி மாவட்டதிலுள்ள மேலக்குடிக்காடு
- பெற்றோர்:- அய்யம்பெருமாள் - மிளகாயி அம்மாள்
- வேறுபெயர்-திரைக்கவித்திலகம்

NATRAJ INSTITUTE OF TNPSC

## ஆனந்தரங்கர்நாட்குறிப்பு

- கல்வெட்டு, செப்பேடு, இலக்கியங்கள் பழங்காலத்தை பற்றிய செய்தி அறிந்து கொள்ள உதவும்.
- ஆனந்தரங்கர் பிறந்த ஊர் - சென்னை , திவானாக பதவி உயர்வு பெற்றார்.
- கல்வி பயின்ற ஆசிரியர் - எம்பார்
- பிறந்த ஊர் - பெரம்பூர்
- அரசு பணியில் இருந்த இடம் - புதுவை (French)
- பாக்கு கிடங்கு நடத்தி வந்தார்
- Dupleix – French Governor-டம் (மொழிப்பெயர்ப்பாளர்) துபாசியாக பணிபுரிந்த காலம் 1736 to 1761 (25 years)
- தம் நாட்குறிப்பிற்கு அவர் இட்ட பெயர்:**'சொஸ்தலிகிதம்'** **'தினப்படி செய்தி குறிப்பு'**.

அவரது நாட்குறிப்பில் இடம் பெற்ற செய்திகள்

- வரலாற்றுச் செய்திகள்
- அரசியலமைப்பு
- நிர்வாக முறை
- French படை காரைக்காலை பிடிக்கச் சென்று தோல்வி அடைந்தது.
- டெல்லியின் மீது பாரசீக படையெடுப்பு.
- குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கியச் செய்திகள்.
- இலபூர் தொனே கப்பல் French நாட்டிலிருந்து சென்றது.
- வெளிநாட்டு பயணிகள் வந்து சென்ற நிகழ்வுகள்.
- அவரது நாட்குறிப்பு வரலாற்று கருவூலமாக திகழ்கிறது.
- அவரது நாட்குறிப்பில் பெரும்பகுதி வாணிகச் செய்திகளை பற்றியே இருக்கும்.

**பண்பாட்டு நிலை:**

- தந்தைக்கும் மகனுக்குமிடையே உறவு
- சுங்கு சேஷாசல செட்டியாரின் பெண்கள் இருவருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு ஆளுநர் வந்ததைப் பற்றியும் திருமண முறை பற்றியும் கூறியிருந்தார்.

**மொழியியல் செய்திகள்:**

- பிறமொழியிலிருந்து கடன் பெற்ற சொற்கள்
- அன்று வழங்கி, இன்று வழக்கிழந்த சொற்கள்
- அந்த கால பேச்சுத்தமிழ், சொற்கள், சொற்றொடர், இலக்கண கூறுகள்.

**ஆனந்தரங்கரின் சிறப்பு:-**

- பிரெஞ்சு கார்களுக்கும் - இந்திய மன்னர்களும் - பாலமாக இருந்தவர்.
- முசபர் சங்க் என்பவர் 3000 குதிரைகள் வழங்கி 'மன்சுபேதார்' பட்டம் வழங்கினார்.
- செங்கல்பட்டு கோட்டை தளபதி
- மாவட்ட ஜாகிர்தார்.
- தமிழ் மக்களின் தலைவர்.
- ஆளுநர் மாளிகைக்குள் பல்லக்கில் செல்லும் உரிமை, செப்பல், தங்கபிடி போட்ட கைத்தடி வைத்துக் கொள்ள உரிமை, மங்கள ஒளி ஓசை முழங்கும், தீர்பு வழங்கும் உரிமை.
- தமிழிலேயே கையெழுத்து இடுவார்.
- **இந்தியாவின் பெப்பிசு, நாட்குறிப்பு வேந்தர்.**
- **ஆனந்தரங்கர் நாட்குறிப்பு** - இலக்கியம், வரலாற்று ஆவணம், பண்பாட்டு பதிவேடு
- அருணாச்சல கவிராயர் தனது இராம நாடகத்தை திருவரங்கத்தில் அரங்கேற்றிய பின்னர், ஆனந்தரங்கர் முன்னிலையில் அரங்கேற்றினார்.
- **K.K. பிள்ளை** புகழ்ந்தது – அவருடைய நாள்குறிப்பில் யாரும் அறிந்திராத அறியதோர் இலக்கிய பணி.
- தான் நேரில் கண்டும், கேட்கும் அறிந்துள்ள செய்திகளை சித்திரகுப்தனைப் போல் ஒன்று விடாமல் குறித்து வைத்துள்ளார். - **வ.வே.சு.**

**ஆனந்தரங்கர் குறித்து வெளிவந்துள்ள இலக்கியங்கள்**

1. தனிப்பாடல்கள்
2. கள்வன் நொண்டி சிந்து
3. ஆனந் புதினங்கள்
4. ஆனந் கோவை - தியாகராஜதேசிகர்
5. ஆனந் பிள்ளைத் தமிழ் - அறிமதி தென்னகன்
6. ஆனந் விஜய சம்பு - சீனிவாசகவி (வடமொழி)
7. ஆனந் நாட்சந்தமு - கஸ்தூரிரங்ககவி (தெலுங்கு)

NATRAJ INSTITUTE OF TNPSC

1. **மு.வரதராசனார்கடிதம்**

- 'தம்பிக்கு' என எழுதுபவர்
- தமிழர்கள் ஒற்றுமை - தமிழ் ஒன்று தான் இணைக்க வல்லது
- தமிழ் ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவும் ஆனால் தவிர தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு.
- கடிதம், பணவிடை, விளம்பர பலகை – விற்பனைச் சீட்டு அனைத்தும் தமிழில் பயன்பட வேண்டும்.
- சாதி, சமய, வேறுபாடுகள் வேண்டாம்
- கட்சி கொள்கையை விட நாட்டு மக்களின் நலனே பெரியது.
- 'ஏழை என்றும், அடிமை என்றும் இல்லை' என்று கூறியவர் - பாரதியார்
  அதை நனவாக்க சொன்னவர் மு.வ
- உன் உயர்வை விட நாட்டின் உயர்வு உயர்ந்தது.
  உன் மானத்தை விட நாட்டின் மானம் உயர்ந்தது.

**தொண்டுக்கு முந்து, தலைமைக்கு பிந்து** – விவேகானந்தர்

- இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. கண்டபடி சொல்ல ஆள் ஏராளம். ஓவ்வொருவரும் ஆணையிடுவதற்கே

விரும்புகிறார்கள். அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை. அதனால் தான் வீழ்ச்சி நேர்ந்தது.

- முடிக்கும் முறை “உன் அண்ணன் வளவன்.”

## 2. அண்ணாவின் கடிதம்

1. தம்பி என்று தொடங்கியிருப்பார்.
2. அண்ணாவின் இதழ் - காஞ்சி இதழ்
3. 1967 ல் பதவியேற்றார். ஊஆ
1968ல் எழுதினார் துயெ 14

‘உழைத்து பெறு, உரிய நேரத்தில் பெறு, முயற்சி செய்து பெறு’ என்று நிலமடந்தை கூறுவதாக அண்ணா கூறுகிறார்.
நுப. பாலூட்டும் தாயும் விளையாட்டு

“தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சி-தருபயன் பெற்று
புதுமை இன்பம் பூணம் நன்னாள்.”

என்று முடியரசர் கூறுகிறார். அதை தமிழ் நாடே ஆம்’ ஆம் என்கிறோம்.

## 3. நேரு

1. 1922 வழ 1964 ம் ஆண்டு வரை 42 ஆண்டுகள் தன் மகளுக்கு கடிதம் எழுதினார்.
2. இரவீந்தரநாத் தாகூரின் விஸ்வபாரத கல்லூரி (West Bengal) சாந்தி நிகேதன் என்ற இடத்தில் உள்ளது.
1935ம் வருடம் எழுதினார். கடிதம் ஆரம்பிக்கும் விதம், செல்ல மகள் இந்து.

- இண்டிகா – ஆசிரியர் - கிருபாலணி
- புத்தகம் வாசிப்பது கடமை, கட்டாயமாக இருக்க கூடாது.
- பிளாட்டோ – கிரேக்க சிந்தனையாளர், சுவையான கிரேக்க நாடகங்கள்-
- காளிதாசர் - வடமொழி நாடக ஆசிரியர், சாகுந்தலம் (நாடக நூல்)
- ஷேக்ஸ்பியர் - நுபெ நாடக ஆசிரியர்
- மில்டன் - நுபெ கவிஞர்
- டால்ஸ்டாய் - ரஷ்ய எழுத்தாளர், போரும் அமைத்தியாய்
  எல்லா அன்புடனும் உன் அப்பா
- பெர்னாட்ஷா – நாடக ஆசிரியர்
- பெட்ரன்ட் ரஸ்ஸல் - ஆங்கில சிந்தனையாளர், ஆங்கில கல்வியாளர்.
- (கேம்பிரிட்ஞ் பல்கலைகழகம்)இங்கிலாந்தில் உள்ளது.
- அல்மோரா சிறைச்சாலை – உத்ரகண்ட்

## 5. காந்தியடிகள் கடிதம்

1917 ஆம் ஆண்டு புரோச் (குஜராத்) நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய தலைமை உரை.

பயிற்றுமொழியைக் குறித்துச் சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது, அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதைப் போன்றது.

கவி இரவீந்திரநாத தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம். ஆங்கிலத்தில் அவருக்கு உள்ள அறிவு மட்டுமன்று, தம்முடைய தாய்மொழியில் அவருக்க இருந்த பற்றுதலும்தான்.

முன்சிராம் பேசும்போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்தம் தாய்மொழி அறிவே.

உயர்ந்த மனம்படைத்த மதன்மோகன் மாளவியாவின் ஆங்கிலப்பேச்சு வெள்ளியைப்போல ஒளிவிட்டாலும், அவரது தாய்மொழிப் பேச்சு, தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்றது.

மொழியின் தன்மை, மக்களின் தன்மையைச் சார்ந்திருப்பது இயற்கையே.

மக்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால், அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும்.

“வேலை தெரியாத தொழிலாளி தன் கருவியின்மீது சீற்றம் கொண்டானாம்’ என ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு. மொழி நிறைவு பெற்றதாக இல்லை எனக் குறை சொல்பவர்கள் இந்தத் தொழிலாளியைப் போன்றவர்களே.

குறைபாடு, மொழியைப் பயன்படுத்துபவர்களிடம்தாம் இருக்கிறதே அன்றி, மொழியில் இல்லை.

தாய்மொழிமூலம் நமக்குக் கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல ஜெகதீஷ் சந்திரபோஸ், பி.சி. இராய்களும் தோன்றியிருப்பார்கள்.

நீங்கள் உங்கள் தாய்மொழியில் அறிவுபெற வாழ்த்தும் ஆசியும்.

**மோகன் தாஸ் காந்தி**

NATRAJ INSTITUTE OF TNPSC

## நாடகக் கலை

- ஆய கலைகள் அறுபத்து நான்கனுள் நாடகக்கலைக்குத் தனியிடமுண்டு.
- நம் முன்னோர் முத்தமிழுள் ஒன்றாகப் போற்றி மகிழ்ந்தனர்.
- உணர்ச்சியைத் தூண்டித், உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் சிறந்த கலை நாடகம்.
- சங்க காலத் தமிழ் வானில், நாடகம் ஒளி வீசித் திகழ்ந்ததாக அறிஞர் கூறுவர். ஆனால், அதனைச் சான்றுடன் நிறுவ ஒரு நாடக நூலும் கிடைக்கவில்லை.
- **சயந்தம், முறுவல், மதிவாணன் நாடகத்தமிழ், செயிற்றியம்** முதலிய நாடக இலக்கண நூல்களின் பெயர்கள் மட்டுமே கிடைக்கின்றன.
- மற்றவை கால வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. கல்வெட்டுகள் வாயிலாக இடைக்காலச் சோழப் பேரரசர்கள் ஆதரவில் ஆலயங்களில் நாடகங்கள் நடத்தப் பெற்றுள்ளன என அறிகிறோம்.
- பின்னர்ப் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்கள், கீர்த்தனை நாடகங்கள் என்பன மக்களிடையே நடந்தேறின.
- இருபதாம் நூற்றாண்டில் நாடகத்தமிழுக்குப் புத்துயிர் ஊட்ட ஓர் எழுச்சி தோன்றியது. அந்த எழுச்சியை, புரட்சியை, மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் மூவர்: **பரிதிமாற்கலைஞர், சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்தனார்.**

பரிதிமாற் கலைஞரைத் **'தமிழ் நாடகப் பேராசிரியர்'** என்றும், சங்கரதாசு சுவாமிகளைத் **'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்'** என்றும், பம்மல் சம்பந்தனாரைத் **'தமிழ் நாடகத் தந்தை'** என்றும் நாடக உலகம் இன்றளவும் போற்றி வணங்குகிறது.

### பரிதிமாற்கலைஞர் (1870–1903)

- தமிழகம் உரிமை இழந்து ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருந்த காலத்தில் அருந்தமிழைப் போற்றி வளர்த்த அறிஞருள் ஒருவர் பரிதிமாற் கலைஞர்.
- **'உயர்தனிச் செம்மொழித் தகுதி தமிழுக்கே உண்டு'** என அக்காலத்திலேயே முழங்கியவர்.
- **சூரிய நாராயண சாஸ்திரி** என்னும் தம் பெயரைத் தூய தமிழில் பரிதிமாற்கலைஞன் என நாடகத் தொண்டாற்றியவர்.
- பரிதிமாற்கலைஞர், செம்மாந்த சீரிய செந்தமிழ் நடையில் நாடகங்களை இயற்றி அரங்கேற்றினார்.
- மேலைநாட்டு நாடக ஆசிரியர்களான சேக்ஸ்பியர், எப்சன், மோலியர் ஆகியோரைப் போன்று தமிழகத்தில் நாடகாசிரியர்கள் தோன்ற வேண்டும் எனப் பெரிதும் விழைந்தவர்.
- **ரூபாவதி, கலாவதி, மானவிஜயம்** என்னும் இவரது நாடகங்கள்.
- தமிழில் நாடக இலக்கண நூல்கள் இல்லையே என்று ஏங்கினார். அதற்காகத் தாமே ஒரு நூலை எழுதினார்.
- வடமொழி, மேனாட்டு மரபுகளைத் தமிழ் நாடக மரபோடு இணைத்து **நாடகவியல்** என்னும் நூலைப் படைத்தார்.
- இவரது மானவிஜயம் நாடகம், களவழி நாற்பது என்னும் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது. சேரமான் கணைக்கால் இரும்பொறையுடன் புலவர் பொய்கையாரும் இறந்துபடுகின்றார். இவ்விருவர் இறப்பிற்கும் தானே காரணம் என்று எண்ணிய சோழன் செங்கணான்,

**மானப் பெருமையை மனக்கொண்டு அந்தோ**
**ஈனப் பாரில் இருத்தல் வேட்டிலை**
**உன்னும் போழ்தினில் உன்னைக் கொன்றவன்**
**செங்கணான் எனும்இச் சிறுமதி யுடையான்**

என்று புலம்பித் தன்னை மாய்த்துக்கொள்ளும் காட்சி, செந்தமிழ் நடையபில அவலச்சுவையை வெளிப்படுத்தும் இடமாகும்.

### சங்கரதாசு சுவாமிகள் (1867 – 1920)

- **நாடகத்தமிழ் உலகின் இமயமலை** எனப் பாராட்டப்படுபவர்
- நாடகம் மக்களை மகிழ்விக்க வேண்டும் என்பதே சுவாமிகளின் முதல் நோக்கமாகும். எனவே, பாமர மக்களுக்குத் தெரிந்த பழங்கதைகளை நாடகமாக்கினார்.
- நாடகத்தைச் சமுதாயச் சீர்திருத்தக் கருவியாகவும் கையிலெடுத்த சுவாமிகள், தம் நாடகங்கள் வாயிலாகப் பத்தி, ஒழுக்கம் ஆகியனவற்றை வலியுறுத்தி, மக்களுக்கு நல்லறிவு புகட்டினார்.
- நாடகத்தமிழ் நலிந்துபோகாமல் தடுத்துக் காப்பதற்கு ஒழுங்கும், கட்டுப்பாடுமே அடித்தளம் என்பதை அறிந்து, சிறுவர்களைக்கொண்டு நாடகக் குழுக்களைத் தோற்றுவித்தார்.
- **வள்ளி திருமணம், கோவலன் சரித்திரம், சதி சுலோசனா, இலவகுசா, பக்தப் பிரகலாதா, நல்லதங்காள், சதி அனுசுயா, வீரஅபிமன்யு, பவளக்கொடி** முதலிய நாற்பது நாடகங்களை இயற்றியுள்ளார்.
- **துடிப்பிருக்கும் சங்கரதாசு எழுத்தில் எல்லாம் சுவைசொட்டும் சந்தநயம் தோய்ந்திருக்கும்.**

என்று 'புத்தனேரி சுப்ரமணியம்' என்பார் சுவாமிகளைப் புகழ்கின்றார்.

**சதி சுலோசனா** நாடகத்தில் இந்திரசித்து, தன் நண்பனிடம் பூக்கள் பற்றிக் கேட்க:

பூவின் விவரம் பலகோடி அதனை
எவர் போதிப்பவர் தேடி
அப்பு கலப்பு பதைப்பு கொதிப்பு
செப்பு அருப்பு இருப்பு நெருப்பு

NATRAJ INSTITUTE OF TNPSC

உப்பு உரப்பு கசப்பு புளிப்பு
இத்தனை பூவிற்குமேல் இரவில் கண்விழிப்பு
இயம்பிய மொழியெல்லாம் தமிழ்ப் புத்தகக் குறிப்பு

என அடுக்குமொழி பகர்வது இவரது சந்த நடைக்குச் சான்றாகும்.

- ❖ இவர் இயற்றிய கோவலன் சரித்திரம் மதுரையில் அரங்கேறியபொழுது ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாம். காற்சிலம்பு விற்று வர நகருக்குப் போவதாகக் கோவலன் கூறக் கண்ணகியோ,

மாபாவியோர் கூடி வாழும் மாநகருக்கு
மன்னா போகாதீர்

என்று பாடுவது போன்ற காட்சி.

அந்நகரத்தார் முன்னிலையிலேயே இப்படியொரு பாட்டு! அவை நடுவே கூச்சலும் குழப்பமும் எழுந்தன. ‘எங்கே அந்த நாடகப் புலவன். கொண்டு வா மேடைக்கு’ என்ற ஆரவாரம் கேட்டுச் சுவாமிகள் அமைதியாக, ஆனால், மிடுக்காக வந்து நின்றார்.

- ❖ அவையினர் முன்பு,‘மா என்பது அலைமகளையும் பா என்பது கலைமகளையும் வி என்பது மலைமகளையும் குறிக்கிறது’ என்று திருவிளையாடற் புராணச் சான்று காட்டி விளக்கி,‘இப்படி மூன்று தேவியரின் அருளையும் முழுமையாய்ப் பெற்ற நகரில் சிலம்பை யார் வாங்கக் கூடும்? என்று இந்நகரைப் பெருமைப்படுத்தினேன்; அப்படியல்லாமல் சிறுமைபடுத்தவில்லை’ என்றார்.
- ❖ **எமன், இராவணன், இரணியன் முதலிய வேடங்கள் புனைந்து** எழுத்துத் திறமையோடு நடிப்புத் திறமையும் பெற்றிருந்தார்.

**பம்மல் சம்பந்தனார் (1875-1964)**

- ❖ 1891 ஆம் ஆண்டு தனது பதினெட்டாம் வயதில் **சுகுணவிலாச சபை**யைத் தொடங்கினார்.
- ❖ இவர் தேவையற்ற ஆடல் பாடல்களைக் குறைத்தார்;
  விடியும் வரை அலுப்புறச் செய்த நிலையை மாற்றினார்; விறுவிறுப்போடு, பல்சுவைகளையும் நிரப்பிக் கலைச்சேவையில் ஈடுபட்டார்
- ❖ பம்மல் சம்பந்தனார், கட்டுக்குலையாத நாடகக் குழுவை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்; அதனால், நடிகர்களால் **கலைஞர்** என மதிக்கப்பட்டார்.
- ❖ நீதிமன்றத்தில் பணியாற்றிய இவர், மாற்றுப் பணியாக நாடகக்கலையினுள் புகுந்தார்.
- ❖ 94 நாடகங்களைத் தமிழன்னைக்குப் படைத்தளித்தார். **மனோகரா, யயாதி, சிறுத்தொண்டன், கர்ணன், சபாபதி, பொன்விலங்கு** என்பன அவற்றுள் சில.
- ❖ சேக்ஸ்பியரின் நாடகங்களைத் தழுவி **‘வாணிபுரத்து வணிகன்’,‘விரும்பிய விதமே,’‘அமலாதித்தியன்’** முதலிய தமிழ் நாடகங்களைப் படைத்தார்.
- ❖ நாடக இயக்குநராகவும் திறமையான நடிகராகவும் அறிவுமிக்க ஆசிரியராகவும் விளங்கினார்.
- ❖ நாடகக் **காட்சிக்கேற்பத் திரைச்சீலைகளையும் பொருத்தமான ஓவியங்களையும்** தொங்கவிடுமாறு வற்புறுத்தினார்.
- ❖ **கேளிக்கை நாடகம்** என்ற வகையினையும் **நாடக நையாண்டியினையும்** தமிழ் நாடக உலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

‘பொட்டும் புனைந்தழகாய்க் கட்டும்
பீதாம்பரமாம் பட்டும்
சோதி செய் பகட்டும்
செயலைக் கண்டு கிட்டும் வருணிக்கும்
பொழுது எனக்கு மட்டும்’

என்ற இவரது அடுக்குமொழிகள், பின்வந்த திரைப்படங்களுக்கு வசனங்களாக மாறின.
இவரது படைப்பான **சபாபதி நாடகப்பாத்திரம்** நகைச்சுவைப் பாத்திரமாகும்.

குறள் வடிவத்தைத் தன் போக்கிற்கேற்ப மாற்றி எழுதியது,

**‘சூதினும் சூதானது யாதெனில் சூதினும்
சூதே சூதா னது’**

இன்று **ஓரங்க நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், வானொலி நாடகங்கள், மேடை நாடகங்கள்** என நாடகக்கலை வளர்ந்து வந்தாலும் சின்னத்திரைத் தொலைக்காட்சித் தொடர்கள் நாடக இடத்தினைப் பிடித்துக் கொண்டன.

**நாடகம்** - நாடு + அகம்.

- ❖ நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். நாட்டின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால், நாடகம் எனப் பெயர் பெற்றது என்பர்.
- ❖ நாடகம் - உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி.
- ❖ கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவதும், கூத்தாக ஆடிக்காட்டுவதும் நாடகம்.
- ❖ இதற்குக் **கூத்துக்கலை** என்னும் பெயர் உண்டு.

**நாடகக்கலையின் தோற்றமும் வளர்ச்சியும்**

- ❖ பிறர் செய்வதைப் போலத் தாமும் செய்து பார்க்கவேண்டும் என்ற மனித உணர்ச்சிதான் நாடகம் தோன்றக் காரணமானது.
- ❖ பண்டைய **மரப்பாவைக் கூத்து, பொம்மலாட்டமாக** வளர்ச்சியடைந்த பின்னர்,**தோல்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து** ஆகியன பாவைக்கூத்தின் வளர்ச்சி நிலைகளாக வழக்கிலிருந்தன.
- ❖ உயிரற்ற பொருள்களை வைத்து விளையாடிய விளையாட்டு, படிப்படியாக வளர்ச்சி அடைந்து, உயிருள்ள மனிதர்களையே வேடம் புனையச் செய்து ஆடிப்பாடி, நடிக்க வைத்தது.

**இலக்கியங்களில் நாடகம் பற்றிய குறிப்புகள்**

NATRAJ INSTITUTE OF TNPSC

- **தொல்காப்பிய மெய்ப்பாட்டியல்** நாடகப்பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்திருக்கிறது.
- **'கூத்தாட் டவைக்குழாத் தற்றே'** என்னும் குறள் வழியாக நாடக அரங்கம் இருந்த செய்தி தெரிய வருகிறது.
- **சிலப்பதிகாரத்தில்** இளங்கோவடிகள்,**நாடகமேத்தும் நாடகக் கணிகை** என்று நாட்டியமாடும் மாதவியைக் குறிப்பிடுகிறார். தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவதை நாட்டியம் என்றும், ஏதேனும் ஒரு கதையைத்தழுவி வேடம்புனைந்து ஆடுவதை நாடகம் என்றும் குறிப்பிட்டு வந்துள்ளனர்.
- **'நாட்டியம்','நாடகம்'** இரண்டிற்கும் பொதுவாகக் **கூத்து** என்ற சொல்லே வழக்கில் இருந்தது.
- சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய **அடியார்க்கு நல்லார்** கூத்துவகைகளைப் பற்றியும், நாடகநூல்கள் பற்றியும் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**இலக்கணம் வகுத்த நாடக நூல்கள்**

- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கருதப்படும் தமிழ் நூல்களில்,**முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்து நூல்** முதலிய பல நாடக நூல்கள் நாட்டியத்திற்கும், நாடகத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளன.
- **சிலப்பதிகாரம்**, நாடகக்கலையைப் பற்றியும் காட்சித்திரைகளைப் பற்றியும் நாடக அரங்கின் அமைப்புப் பற்றியும் விரிவாகக் கூறியுள்ளது.
- பரிதிமாற்கலைஞர், செய்யுள் வடிவில் இயற்றிய தம் **நாடகவியல்** எனும் நூலில் நாடகம் அதன் விளக்கம், வகைகள், எழுதப்பட வேண்டிய முறைகள், நடிப்புக்குரிய இலக்கணம், நடிப்பவர்களுக்குரிய இலக்கணம் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.
- சுவாமி விபுலானந்தர் எழுதிய **மதங்க சூளாமணி**யும் மறைமலையடிகள் எழுதிய **சாகுந்தலமும்** நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களாகும்.
- நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார்,**நாடகத்தமிழ்** என்ற தம்நூலில் தொழில்முறை நாடக அரங்குகளைப்பற்றிய செய்திகளை எழுதியுள்ளார்.

**காலம்தோறும் நாடகக்கலை**

- 7-ம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் **மத்தவிலாசம்** என்ற நாடக நூலை எழுதியுள்ளான்.
- 11-ம் நூற்றாண்டில் இராசராசசோழன் ஆட்சிக்காலத்தில் **இராசராசேச்சுவர நாடகம்** நடைபெற்றதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. தஞ்சாவூரை ஆண்டபோது கோவிலில் நாடகங்கள் மராத்திய மன்னர்களால் நடத்தப்பெற்றன.
- நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் **குறவஞ்சி நாடகங்கள்** தோன்றின. **பள்ளு நாடகவகை**, உழவர்களின் வாழ்க்கையைச் சித்திரித்துள்ளன.
- 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்,**நொண்டி நாடகங்கள்** தோன்றின. செல்வக்குடியில் பிறந்த ஒருவன், ஒழுக்கங்கெட்டு, நோயும் வறுமையும் உற்று இறுதியில் திருந்தி வாழ்வதாக இவ்வகை நாடகங்கள் அமைந்தன.
- 18-ம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் **இராம நாடகம்**, கோபால கிருட்டின பாரதியாரின் **நந்தனார் சரித்திரம்** ஆகியன கட்டியங்காரன் உரையாடல்களோடு முழுவதும் பாடல்களாக அமைந்தன. இக்காலத்தில் தோன்றிய பெரும்பாலான நாடகங்கள், மகாபாரதம், இராமாயணம் போன்ற காவியங்களின் கதைக்கூறுகளிலிருந்து படைக்கப்பட்டன.
- ஊர்களில்,**தெருக்கூத்து** என்னும் நாடகவகை, புராணக்கதைகளையே மையமாகக் கொண்டு நடத்தப்பட்டன.
- 19-ம் நூற்றாண்டில் சமுதாயச் சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் சிறப்பிடம் பெற்றன. காசி விசுவநாதரின் **டம்பாச்சாரி விலாசம்** குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணியம் என்னும் **கவிதை நாடகக் காப்பியத்தைக்** கி.பி. 1891 ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூல் லார்ட் லிட்டன் எழுதிய மறைவழி எனும் ஆங்கிலக் கதையைத் தழுவியதாக இருந்தாலும் வடிவத்தாலும், பாத்திர அமைப்பாலும், சூழலாலும் தமிழ்ப்பண்பு ஓங்கியிருந்தது.
- நாட்டு விடுதலைப் போராட்டக் காலக்கட்டத்தில், பல்வேறு காலத்திய **தேசிய நாடகங்கள்** அரங்கேறின.
- கதரின் **வெற்றி நாடகம்**தான் தமிழ்நாட்டில் முதன்முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகமாகும். இதனைத் தொடர்ந்து **தேசியக்கொடி, தேசபக்தி** முதலிய நாடகங்கள் நடத்தப்பட்டன.
- 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்துறைக்குப் பெருந்தொண்டு புரிந்தவர் சங்கரதாசு சுவாமிகள். **நாடக உலகின் இமயமலை என்றும், தமிழ்நாடகத் தலைமையாசிரியர்**என்றும் சுவாமிகள் அழைக்கப்பட்டார். **பிரகலாதன், சிறுத்தொண்டர், இலவகுசா, பவளக்கொடி, அபிமன்யு, சுந்தரி** முதலான நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.
- **தமிழ் நாடகத் தந்தை** என்று பம்மல் சம்பந்தனாரையும், தமிழ் **நாடக மறுமலர்ச்சித் தந்தை** என்று கந்தசாமியையும் நாடக உலகில் அழைத்தனர்.
- பம்மல் சம்பந்தனார் தொண்ணூறுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். சேக்சுபியரின் ஆங்கில நாடகங்களை

NATRAJ INSTITUTE OF TNPSC

மொழிபெயர்த்துள்ளார். இவரது **மனோகரன் நாடகம்** எழுபது ஆண்டுகளாகத் தமிழ் நாடகமேடையில் புகழ்பெற்று விளங்கியது. தமது நாடக அனுபவங்களையெல்லாம்,**நாடகமேடை நினைவுகள்** என்னும் தலைப்பிலும்,**நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி?** என்னும் தலைப்பிலும் எழுதியுள்ளார்.

- மதுரையில் 1942 ஆம் ஆண்டில் **புலமைக்கடலான தமிழ் மூதாட்டி ஔவையார் நாடகம்** அரங்கேறியது. நாடகம் முழுவதும் ஔவையாராக நடிக்கும் வாய்ப்பைப்பெற்றுச் சிறந்த முறையில் நடித்தார் **தி.க. சண்முகனார்(ஔவை சண்முகனார்).**

## ஓவியக்கலை

தமிழர் வளர்த்த நுண்கலைகளின் வரிசையில் ஓவியக்கலை முன்னணியில் நிற்கிறது.

பழங்கால மக்கள் தம் உள்ளக் கருத்துகளைப் புலப்படுத்த பாறைகளிலும் குகைகளிலும் கீறி எழுதினர். தம் எண்ணத்தைச் சித்திரம் வரைந்து வெளிப்படுத்தினர்.

இவற்றைத் தொல்பொருள் ஆய்வுகளாலும் இலக்கியச் சான்றுகளாலும் அறிந்துகொள்ள முடிகிறது.

கி.மு. 2000 ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் இனக்குழுக்களாக மக்கள் வாழ்ந்தனர். தாம் தங்கிய மலைக்குகைளிலும் பாறைகளிலும் **கோட்டோவியங்கள்** வரைந்தனர்.

தமிழகத்தில் 25-கும் மேற்பட்ட இடங்களில் **மான், போர் செய்தல், விலங்கு வேட்டை** ஆகியனவற்றைக் குறிக்கும் **குகை ஓவியங்கள்** கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்னரே ஓவியங்கள் வரையப்பட்டன. தாம் வரைந்த ஓவியங்களை முதலில் **கண்ணெழுத்து** என்றே வழங்கியுள்ளனர்.

தமிழ் இலக்கியத்தில் **எழுத்து என்பதற்கு ஓவியம்** எனப் பொருள் இருந்ததனைப் **பரிபாடல், குறுந்தொகை** செய்யுள் அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

ஓவியம் வரைதற்கு **நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு** முதலியன அடிப்படையாகும். இவ்வாறு வரையப்படுபவை **கோட்டோவியங்கள்** எனப்படும். அவ்வரைகோடுகள்மேல் சிவப்பு, கருப்பு, மஞ்சள், நீலம் முதலிய வண்ணங்கள் பூச, அழகிய ஓவியங்களாக உருவெடுக்கும்.

தொல்காப்பியம் **நடுகல் வணக்கம்** பற்றிக் கூறுகிறது. நடுகல்லில் போரில் வீரமரணம் எய்திய வீரனது உருவம், பெயர், பெருமைக்குரிய செயல் முதலியனவற்றைப் பொறிக்கும் பழக்கம் இருந்தது.

ஓவியக்கலை **ஓவு, ஓவம், ஓவியம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி** எனப் பல பெயர்களால் வழங்கப்பெற்றது.

ஓவியக் கலைஞர் **ஓவியர், ஓவியப்புலவன், கண்ணுள் வினைஞன், சித்திரகாரர், வித்தக வினைஞன், வித்தகா, கிளவி வல்லோன்** என அழைக்கப்பட்டார்.

ஓவியர் எண்ணங்களின் எழுச்சியைப் பல வண்ணங்களின் துணைகொண்டு எழுதுவோராதலின் **கண்ணுள் வினைஞர்** எனப் புகழப்பெற்றார்.

நச்சினார்க்கினியர் தம் உரையில் ஓவியருக்கு,**'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்'** என இலக்கணம் வகுத்திருப்பார்.

ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமை பெற்ற ஆசிரியர் **ஓவியப் புலவன்** எனப் போற்றப்பட்டார்.

ஓவியக் கலைஞர் குழுவை **ஓவிய மாக்கள்** என்றழைத்தனர். ஆண் ஓவியர் **சித்திராங்கதன்** எனவும், பெண் ஓவியர் **சித்திரசேனா** எனவும் பெயர் பெற்றிருந்தனர்.

ஆடல் மகள் மாதவி,**'ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறை போகப் பொற்றொடி மடந்தையாக இருந்தனள்'** எனச் சிலம்ப பகர்கிறது.

### வரைகருவிகள்

**வண்ணந்தீட்டும் கோல், தூரிகை, துகிலிகை, வட்டிகை** எனப்பட்டது. வண்ணங்கள் குழப்பும் பலகைக்கு **வட்டிகைப் பலகை** எனப் பெயரிட்டிருந்தனர்.

### வரைவிடங்கள்

ஓவியம் வரையப்பட்ட இடங்கள் **சித்திரக்கூடம், சித்திரமாடம், எழுதுநிலை மண்டபம், எழுதெழில் அம்பலம்** என வழங்கப்பட்டன.

இறை நடனம் புரிவதற்கே **சித்திர சபை** ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

அரசர் வாழும் அரண்மனை அந்தப்புரங்கள், செல்வர் வாழும் வளமனைகள் மாளிகைகள், ஆடலரங்ககள், கோவில் மண்டபங்கள், பொதுமன்றங்கள் முதலிய இடங்களில் கட்டடச் சுவர்கள், மேற்கூரைகள், தூண்களில் ஓவியங்களை வரைந்தனர். ஓவியத்தால் மக்கள் வீடுகளை அலங்கரித்தனர்.

புறநானூற்றில்,**ஓவத்தனைய இடனுடை வனப்பு** என வீட்டின் அழகை ஓவியத்திற்கு ஒப்ப வைத்துக் கவிஞர் போற்றுகிறார்.

**சுடுமண் சுவர்** மீது வெண்சுதை (சுண்ணாம்பு) பூசிச் செஞ்சாந்துகொண்ட ஓவியங்கள் தீட்டினர். **மரப்பலகை, துணிச்சீலை, திரைச்சீலை**களில் ஓவியம் எழுதினர். நாடகமேடைகளில் பல வண்ணங்களில் கவின்மிகு காட்சிகள் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் தொங்கினவற்றை **'ஓவிய எழினி'** கொண்டு அறிகிறோம்.

வண்ணங்கல்லாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதைப் **புனையா ஓவியம்** என்றழைத்தனர். இன்றும், இது **மென்கோட்டு ஓவியமாக** நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### ஓவியத்திற்குரிய கருப்பொருள்கள்

இயற்கைக் காட்சிகள், கற்பனைக் காட்சிகள், சமுதாய வாழ்க்கை முறைமை, இதிகாச புராணக்கதைகள்.

ஓவியர்கள் சோதிடக்கலை, வானநூல், கதைகள் முதலியவற்றைக் கற்றுணர்ந்து செவ்வனே சித்திரம் தீட்டினர்.

NATRAJ INSTITUTE OF TNPSC

ஆடு முதலான பன்னிரண்டு இராசிகளையும், விண்மீன்களையும் வரைந்த செய்தி,**நெடுநல்வாடை** என்னும் சங்க நூல் தரும் அரிய செய்தியாகும்.

ஓவியங்களில் நிற்றல், இருத்தல், கிடத்தல் ஆகிய மனித இயல்புகளையும் வீரம், சாந்தம், சினம், வியப்பு, உவகை முதலிய மெய்ப்பாடுகளையும் உத்தமம், மத்திமம், அதமம் மற்றும் தசதாளம், நவதாளம், பஞ்சதாளம் முதலிய அளவுகளையும் வலியுறுத்துவது தமிழருக்கே உரிய ஓவிய மரபுகளாக விளங்குகின்றன.

சங்க காலத்தில் செழித்திருந்த ஓவியக்கலை இடைக்காலத்தில் சிதைந்து மறைந்து கொண்டிருந்த ஓவியக்கலைக்கு மீண்டும் **புத்துயிர் ஊட்டியவர்கள் பல்லவப் பேரரசர்கள்.**

கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட **முதலாம் மகேந்திரவர்மப் பல்லவன்(சித்திரகாரப்புலி)** காலத்தில் ஓவியக்கலை எழுச்சியுற்று உயர் நிலையை எட்டியது.

**தட்சிணசித்திரம்**-ஓவிய நூலுக்கு இம்மன்னன் உரை எழுதியுள்ளான்.

பல்லவர் கால ஓவியங்கள்,**பனமலை, திருமலை, மாமல்லபுரக் குகைக்கோவில், மாமண்டூர், காஞ்சிக் கைலாசநாதர் கோவில்** முதலிய இடங்களில் ஓவியங்கள் சிதைந்த தோற்றத்தோடு காணப்படுகின்றன.

**பார்வதி உருவம், கின்னரர், கின்னரி, கந்தர்வர்** ஓவியங்கள் காண்போரை மயக்குவன.

**திருநந்திக்கரையில் சேரர் கால ஓவியங்கள்** கிடைத்துள்ளன. **சித்தன்னவாசல்** (புதுக்கோட்டை)-**குகைக்கோவில் ஓவியங்கள்** ஓவியக் கருவூலங்களாக போற்றத் தகுந்தன.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் **அவனிப சேகர ஸ்ரீவல்லபன்** என்ற பாண்டிய மன்னன் காலத்தில்,**மதுரை ஆசிரியர் இளம்கௌதமன்** என்று கல்வெட்டுச் செய்தி அறிவிக்கின்றது. அங்குள்ள தாமரைத்தடாகம், ஆடல் அணங்குகள், அரசன், அரசி என இவ்வோவியங்களை வரைந்தார்

**சோழர்கால ஓவியங்கள்** வனப்புமிக்க ஓவியங்களைத் **தஞ்சைப் பெரியகோவிலில்** காணலாம். சேரமான், சுந்தரர் கயிலைசெல்லும் காட்சி, சிவபெருமான் முப்புரம் எரித்த காட்சி, சுந்தரரைத் தடுத்தாளும் கோலம், நாட்டிய மகளிர், மாமன்னன் இராசராசன், கருவூர்த்தேவர் ஓவியங்கள் முதலிய வரலாற்றுச் சிறப்பை உணர்த்துவன.

திருவரங்கம், திருப்பதி, தில்லை, திருவாரூர், குடந்தை, மதுரை, காஞ்சி முதலிய பல இடங்களில் **விசயநகர,நாயக்க மன்னர்களின் ஓவியங்கள்** காணப்படுகின்றன.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்தில் ஓவியக்கலை நன்கு வளர்ச்சி பெற்றது. **ஓலைகளிலும், கண்ணாடிகளிலும், தந்தங்களிலும்** ஓவியங்கள் தீட்டப்பெற்றன. **வண்ணங்களின் வனப்புக்கேற்ப இரத்தினங்கள்** பதிக்கப்பெற்றன.

ஈராயிரம் ஆண்டுகளாக ஓவியக்கலை உள்ளது.

**'எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி'** என மதுரைக்காஞ்சியும் மணிமேகலையும் கூறுகின்றன.

தமிழ்நாட்டில் இப்பொழுது எஞ்சியுள்ள ஓவியங்களில் மிகவும் தொன்மையானவை பல்லவப் பெருமன்னர் காலத்தவையே யாகும்.

தமிழ் மன்னர் இவ்வாறு வளர்த்த ஓவியங்களை அவர்கள் கட்டிய கோயில்களின் நுழைவாயிலின் இரு பக்கங்களிலும் கருப்பக்கிரகச் சுவர்களிலும் பிரகாரங்களிலும் விதானத்திலும் தீட்டினர். அவ்வாறு தீட்டப்பட்ட ஓவியங்கள் **மாமண்டூர்க் குகைகளின் வெளி மண்டபத்திலும் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், பனமலைக் கோயில், தஞ்சைப் பெருவுடையார் கோயில்** முதலிய பல இடங்களிலும் காணப்பெறுகின்றன. இதில் **பனமலையில் உள்ள மண்டபத்தில் காணப்படும் எழிலார்ந்த ஆடல் மகளின் ஓவியம்** மிகச் சிறப்பு வாய்ந்தது.

## பேச்சுக்கலை

ஆயகலைகள் 64 கலைகளுள் பேச்சுக்கலையும் ஒன்று.

மேடைப்பேச்சில் நல்ல தமிழைக் கொண்டு மக்களை ஈர்த்தோர் **தமிழ்த்தென்றல் திரு.வி.க., பேரறிஞர் அண்ணா, ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார்** முதலியோர்.

### பேச்சுக்கலையில் மொழியும் முறையும்

கேட்டார்ப் பிணிக்கும் வகையில் பேசத் தெரிதல் வேண்டும்.

மின்சாரம் பாயக் கம்பி கருவியாக இருப்பது போலக் கருத்தை விளக்க மொழி கருவியாக உள்ளது.

### முக்கூறுகள்

பேசும்பொருளை ஒழுங்குமுறைக்குக் கட்டுப்படுத்தித் தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப் பகுத்துப் பேசுவதையே பேச்சுமுறை என்கிறோம்.

இதனை **எடுத்தல்** (தொடக்கவுரை), **தொடுத்தல்** (பொருளை விரித்துப் பேசும்முறை), **முடித்தல்** எனவும் கூறலாம்.

### பேச்சின் அணிகலன்கள்

இலக்கியக்கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றவை.

எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே அணி

'விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்'

NATRAJ INSTITUTE OF TNPSC

## திரைப்படக்கலை

### திரைப்படத்தின் வரலாறு

**ஒளிப்படம் எடுக்கும் முறை**யை 1830 ஆம் ஆண்டு கண்டுபிடித்த பின்னர்,**எட்வர்டு மைபிரிட்சு** என்ற ஆங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையை இயக்கப் படமாக எடுத்து வெற்றிபெற்றார்.

**ஈஸ்ட்மன்** என்பார் **படச்சுருள் உருவாக்கும் முறை**யைக் கண்டுபிடித்தார்.

**எடிசன்,** ஒருவர் மட்டும் பார்க்கும் **படக்கருவி**யைக் கண்டுபிடித்தார்.

**பிரான்சிஸ் சென்கின்சு** என்ற அமெரிக்கர் 1894 இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப் படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார். **புதிய படவீழ்த்திகள்** உருவாக, இவருடைய கருத்துகளே அடிப்படையாக அமைந்தன.

இவ்வியக்கப் படத்தில் நாட்டியம், கடல் அலைகள் கரையில் மோதுதல் முதலிய காட்சிகளைக் காண முடிந்தது. இவற்றைப் பல ஆயிரக்கணக்கான இடங்களில் படம் காட்டிக் கட்டணம் வசூலிக்கத் தொடங்கினர். இவை பேசும் படங்கள் அல்ல, ஊமைப் படங்களே.

### திரைப்படச்சுருள்

திரைப்படம் எடுக்கப் பயன்படும் **படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால்** ஆனது.

படம் எடுக்கப் பயன்படும் சுருள்,**எதிர்ச்சுருள்** எனப்படும். ஒலி, ஒளிப்பதிவுகளைத் தனித்தனிப் படச்சுருள்களில் அமைப்பர்.

### ஓலிப்பதிவு

நடிகர்களின் உரையாடலில் எழும் ஒலி அலைகள் ஒரு நுண்ணொலிபெருக்கியைத் தாக்கும். நுண்ணொலிபெருக்கி ஒலியலைகளை மின் அதிர்வுகளாக்கும். மின் அதிர்வுகள் பெருக்கப்பட்டு ஒருவகை விளக்கினுள் செலுத்தப்படுகின்றன. அம்மின்னோட்டத்திற்குத் தக்கவாறு விளக்கின் ஒளி மாறும். இவ்வொளி, படச்சுருளின் விளிம்பிலுள்ள பகுதியில் விழுந்து, அங்கு அஃது ஒலிப்பாதையைத் தோற்றுவிக்கும்.

### கருத்துப்படம்

கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் **வால்ட் டிஸ்னி.** அவர் ஓவியர், ஒரே செயலைக் குறிக்கும் பல்லாயிரக்கணக்கான படங்களை வரைவார்.

'கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பே' எனும் வரிகள் திரைப்படத்திற்கும் பொருந்தும்.

## கட்டடக்கலை

இலக்கியங்களில் மன்னர்கள் வாழ்ந்த அரண்மனைகள் பற்றிய செய்தி உள்ளது. நகர அமைப்புப்பற்றிப் பேசப்படுகிறது. யானைமீது போர்வீரன் ஒருவன் அமர்ந்து, தன் கையில் மிக உயர்ந்த கொடியை ஏந்திச் செல்லும் அளவுக்கு உயர்ந்த வாயில்கள் அரண்மனைகளில் இருந்திருக்கின்றன. பெரும் மாளிகைகள் இருந்திருக்கின்றன.

ஐவகை நிலங்களுக்கு ஏற்பச் சிறு வீடுகள் கட்டிக்கொண்டு மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆனால், அவற்றின் நேரிடைச் சான்றுகள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகாரில் நடைபெற்ற அகழ்வாய்வில் புத்த விகாரம் ஒன்றும் பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் முகத்துவாரக் கட்டடமும் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் மக்கள் வாழ்ந்த கட்டடப் பகுதி ஏதும் வெளிப்படுத்தப்படவில்லை.

கொற்கையில் நிகழ்ந்த அகழ்வாய்விலும் உறையூரில் மேற்கொண்ட அகழ்வாய்விலும் கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடப் பகுதிகள் கிடைத்தன.

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கங்கைகொண்ட சோழபுரத்தின் பகுதியான உள்கோட்டையில் முதலாம் இராசேந்திர சோழன் வாழ்ந்த அரண்மனைப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.முழுப்பகுதியும் வெளிப்படுத்தப்பட்டால் கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டில் மன்னர்களது அரண்மனை எவ்வடிவில் இருந்தது என்பதை உணர்ந்துகொள்ள உறுதுணையாக இருக்கும்.

ஆனால், கோயிற் கட்டடக்கலை என்று எடுத்துக் கொண்டால் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து நாம் கூறமுடியும். தமிழகத்தின் தென்பகுதியான **இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பிள்ளையார்பட்டி என்னும் ஊரின் குடைவரைக் கோயிலே** தமிழகத்தில் இன்று காணப்பெறும் குடைவரைக் கோயில்களுள் பழமையானதாகும். இது பாண்டியர்களது படைப்பாகும்.

தமிழகத்தின் பல பகுதிகளில் குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல்லவர்கள், பாண்டியர்கள். அதியர், முத்தரையர் ஆகியோர் அமைத்தவைகளாகும் அவை.

கி.பி.9 ஆம் நூற்றாண்டோடு குடைவரைக் கோயில்கள் அமைக்கும் முறை பல்லவர், பாண்டியர் காலத்தில் இருந்திருக்கிறது.

**மாமல்லபுரத்தில் உள்ள ஐந்து ரதங்களும் கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயிலும்** முறையே அவர்களது படைப்புகளாகும். இம்முறை கி.பி. 8 ஆம் நூற்றாண்டளவிலேயே நின்றுவிட்டது.

கற்களை ஒன்றோடு ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோயிற்பணி பல்லவர், பாண்டியர் காலந்தொட்டு ஏற்பட்டு வருகிறது.

NATRAJ INSTITUTE OF TNPSC

**பல்லவர் காலத்துச் சிறந்தவைகளாக மாமல்லபுரத்துக் கடற்கரைக்கோயிலையும் காஞ்சிபுரத்துக் கைலாயநாதர் கோயிலையும் பாண்டியர் காலத்ததாகத் திருப்பத்தூர் திருத் தளிநாதர் கோயிலையும் சோழர் காலத்துச் சிறந்தவைகளாக நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரம், தஞ்சை இராசராசேச்சுரம் என்னும் தஞ்சைப் பெருவுடையார் கோயில், கங்கை கொண்ட சோழபுரத்துக் கங்கைகொண்ட சோழீச்சுரம், தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில், திரிபுவனம் திரிபுவன வீரேச்சுரம்** முதலானவற்றைக் காட்டலாம்.

**கோயில்களில் கோபுரம் அமைத்தல் பல்லவர் காலத்தில்** தொடங்கி விசயநகர மன்னர்கள் காலத்தில் மிகவும் உன்னத நிலை எய்தியது.

## சிற்பக்கலை

**கொல்லிப்பாவை, கண்ணகிசிலை, பெரும் மாளிகைகளில் கதை உருவங்கள் அமைத்திருத்தல்** ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

பல்லவர் காலந்தொட்டு, கோயில்களில் பல்வகையான சிற்பங்களைக் காண முடிகிறது. **கடவுள்களின் திருவுருவங்கள், அக்காலத்திய மக்களின் உருவங்கள், மற்றும் விலங்கினங்கள், பறவையினங்கள்** ஆகியவற்றின் உருவங்களாகும் அவை.

கடவுள்களது உருவங்களாயினும், சாதாரண மக்களின் உருவங்களாயினும் அவ்வவற்றிற்கு ஏற்ற வகையில் உடல் அமைப்பு, முகப்பொலிவு, அவயவங்களின் அளவு மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருப்பது தமிழர் தம் கலைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

விலங்கினங்களில் குறிப்பாக,**யானையின் உருவத்தைச் செதுக்குவதில் பல்லவர் காலத்துச்** சிற்பிகள் கைதேர்ந்தவர்களாக விளங்கியிருக்கின்றனர். பல்லவர்காலச் சிற்பங்களை மாமல்லபுரம் ஒன்றிலேயே கண்டு களித்துவிடலாம். **பல்லவர்காலத்துச் சிற்பிகள் கோயிலையே ஒரு சிற்பமாக வடித்தெடுத்துள்ளார்கள்.**

**சோழர்காலம்:**

கோயில்களின் அதிட்டானத்தில் காணப்படும் சிறு சிற்பங்கள். இராமாயணக் காட்சிகளையும், சிவபுராணக் காட்சிகளையும் தேர்ந்தெடுத்துச் சிறுசிறு புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கியிருப்பது.

கடவுள்களது உருவங்களாயினும் அரச, அரசியர்கள் உருவங்களாயினும் அவற்றில் காணப்பெறும் உருவ அமைப்பு, முகப்பொலிவு, கடவுள் தன்மை, விழியோட்டம், புரவ நெளிவு, கை அசைவு.

விசயநகர நாயக்கர் காலங்களில், முகம்மதியர், வெளிநாட்டார் ஆகியோரின் கலாசாரத்தாக்குதல் ஏற்படவே சிற்ப அமைப்புகளிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

கடவுள் தன்மைக்கும் கலை அம்சத்துக்கும் தரப்பட்ட முக்கியத்துவம், விசயநகர நாயக்கர் காலங்களில் மனிதத் தன்மைக்கும் உடற்கூறுகளுக்கும் தரப்படலாயின.

**செப்புப்படிமக் கலை**

சுமார் 2800 ஆண்டுகட்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் செப்புப்படிமக்கலை வளர்ச்சி பெற்றிருக்கிறது.

**திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில்** கிடைத்துள்ள **தெய்வச் செப்புத் திருமேனி** இதற்குத் தக்கதொரு சான்றாகும்.

அண்மைக்காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட செப்புத் திருமேனிகளினால் பல்லவர் காலத்தில் இக்கலை நல்ல வளர்ச்சியுற்ற நிலையில் விளங்கியிருந்தது. **கூரம் நடராசர், கொடுமுடி திரிபுராந்தகர், திரிபுரசுந்தரி** போன்ற படிமங்களைப் பல்லவர் காலத் திருமேனிகளுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

சிற்பங்களில் காணப்பெறும் அதே கலைப்பாணியைச் செப்புத் திருமேனிகளிலும் காண முடிகிறது.

**செப்புத்திருமேனிகளின் பொற்காலம் – சோழர் காலம்.** எண்ணிக்கையிலும் அதிக அளவில் சோழர் காலத்தில்தான் செய்யப்பட்டிருக்கின்றன.

செம்பியன் மாதேவி போன்ற சோழப் பேரரசிகள், செப்புத் திருமேனிகள் செய்தளிப்பதைத் தாம் இம்மண்ணுலகில் பிறந்ததன் கடமை என்று எண்ணிச் செய்தளித்திருக்கின்றார்கள்.

சிவன் மூர்த்தங்களாயினும் திருமால் மூர்த்தங்களாயினும் அவை எவ்வாறு செய்யப்பட வேண்டுமென்று ஆகம நூல்களில் குறிக்கப்பட்டுள்ளனவோ அதற்கேற்பச் செய்யப்பெற்றவை. ஒவ்வொரு திருமேனியிலும் அக்காலச் சிற்பியின் கைத்திறன் பளிச்செனக் காணப்படும்.

சிற்பக்கலை எவ்வாறு பிற்காலத்தில் சீரழிந்ததோ அதே போன்று **செப்புப் படிமக்கலையும் விசயநகர நாயக்கர் காலத்தில் சிறப்பிழந்து காணப்படுகிறது.**

**மரச் சிற்பக்கலை:** கி.பி 16 ஆம் நூற்றாண்டிலிருந்தே காணப்படுகிறது. கோயில்களில் திருவிழாக்கள் அதிகமாக அதிகமாக மரச் சிற்பங்கள் செய்யும் தொழில் வளர்ச்சி பெற்றுள்ளது. குறிப்பாக, தேர்த்திருவிழா ஏற்பட்ட பிறகே,**தேர்** செய்கையில் அத்தேரில் சிற்பங்களைச் செதுக்குவதும் நடைபெற்றிருக்கிறது. சில ஆலயங்களில் **கோபுர வாயில் கதவுகளிலும்** சிறந்த மரச் சிற்பங்களைக் காண முடிகிறது. பிற்காலத்தில் **செட்டி நாட்டார் வீடுகளில் வாயில் நிலைகளில் மரச்சிற்பங்கள்** செய்து அழகுபடுத்தியிருந்ததையும் அறியலாம்.

**தந்தச் சிற்பக்கலை:** நாயக்க மன்னர்கள் காலங்களில்தான் சிறப்புப்பெற்றிருக்கிறது. கடவுள் உருவங்களும் அரச, அரசியர் உருவங்களும் மற்றும் பெட்டி, பல்லக்குத் தண்டு போன்ற பொருள்களும் தந்தத்தால் செய்யப்பட்டிருக்கின்றன.

திருவரங்கத்தில் நாயக்க மன்னர், அவரது பட்டத்தரசி ஆகியோரது உருவங்கள் நான்கடி உயரத்தில் தந்தத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. அதே கோயிலில் திருமலை நாயக்கர் தம் பட்டத்தரசியோடு இருப்பது, மற்றும் கடவுள் உருவங்கள் ஆகியவை சிறிய அளவில் நிரம்ப உள்ளன.

NATRAJ INSTITUTE OF TNPSC

மதுரைக்கு அருகிலுள்ள அழகர் கோயிலும் தந்தச் சிற்பங்கள் நிரம்ப இருக்கின்றன.

### இசைக்கலை

- ❖ மனிதன், தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு கருவி.
- ❖ பண்கள், இசைக் கருவிகள், இசைக்கலைஞர்கள், இசைப்பாடல்கள் என இசை பற்றிய ஏராளமான குறிப்புகள் இலக்கியங்களில் உள்ளன.
- ❖ தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன.
- ❖ 'நரம்பின் மறை' என்று தொல்காப்பியர் உரைப்பதன் மூலம் இசை இலக்கணநூல் உண்டென உணரமுடிகிறது.
- ❖ பாணன், பாடினி, கூத்தன், விறலி - இயலிசை நாடகக் கலைஞர்கள்
- ❖ தமிழர் வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்புவரைக்கும் இசையே முதன்மை.
- ❖ தாலாட்டு என்பது குழந்தையைத் தொட்டிலிட்டுப் பாடுவது.

  ஒப்பாரி என்பது 'இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர்' என்று இறந்தவரைப்பற்றிப் பாடுவது.
- ❖ இன்றைய கருநாடக இசைக்குத் தாய் நம் தமிழிசையே.
- ❖ 'பண்ணொடு தமிழொப்பாய்' எனும் தேவாரம்,'பண்ணும் தமிழும் பிரிக்க முடியாததொன்று' என்று நவிலும்.
- ❖ தமிழர், ஐவகை நிலத்திற்கும் ஐந்திணைக்கும் ஏற்ற பண்ணிசை வகுத்தனர்; தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி எனப் பல்வேறு இசைக் கருவிகளைப் பயன்படுத்தினர்.
- ❖ 'குழலினிது யாழினிது' என்று இசைபொழியும் கருவிகளை வள்ளுவம் குறிக்கின்றது.

### தொன்மைத் தமிழகம்

முதல் மாந்தன் தோன்றிய இலெமுரியாவை 'மனித நாகரிகத் தொட்டில்' என்பர்.
தமிழகம் இன்றுபோல் இல்லாது, குமரிமுனைக்குத் தெற்கே இன்னும் விரிந்து, குமரிமலை, பஃறுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது.
இச்செய்தியைச் சிலப்பதிகாரம்,

**பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள**

என்ற பாடல் வரிகளால் தெளிவாக உணர்த்துகிறது.

**திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்**
**மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்.**
என்று புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பாடுகிறார்.

### தமிழ்மொழியின் தொன்மை

தமிழர் உணவு, உடை, விருந்து,ஈகை, பொறை, நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர்; உழவையும், தொழிலையும் மதித்திருந்தனர்; வினையே ஆடவர் உயிராகக் கருதினர்; சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர்; விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர்; புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர்; பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர்;ஈந்து உவந்து இன்பம் கண்டனர்.

### வாணிகம்

பழந்தமிழ் நாட்டில் வாணிகம் வளர்ந்திருந்தது. தமிழர்கள், அறத்தின் வழியே வாணிகம் செய்தார்கள். பொருள் தேடுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொள்ளாதவர்கள். அவர்கள் கொள்வதும் மிகைகொளாது, கொடுப்பதும் குறைபடாது வாணிகம் செய்தார்கள்; உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொருளீட்டினார்கள்.

நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை, வரகு முதலிய தானிய வகைகளையும், உளுந்து, கடலை, அவரை, துவரை, தட்டை, பச்சை, கொள்ளு, எள்ளு முதலிய பருப்பு வகைகளையும் தமிழர்கள் விற்றார்கள்.

### கடல் வாணிகம்

- ❖ பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல்கடந்து வாணிகம் செய்தனர்.
- ❖ பூம்புகார் முதலான பெருநகரங்கள், வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன.
- ❖ கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில்தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.
- ❖ கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.
- ❖ தமிழர்களுக்குச் சாவக நாட்டுடனும் கடல் வணிகத் தொடர்பு இருந்தது.

### மொழித் தொன்மை

NATRAJ INSTITUTE OF TNPSC

- ‘தமிழ்கெழு கூடல்’ என்று புறநானூறும் ‘தமிழ்வேலி’ என்று பரிபாடலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தையே குறிக்கின்றன.
- ‘கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்’ என்று மணிவாசகமும் பழந்தமிழ்ச் சங்கத்தையும் சங்கமிருந்து தமிழாய்ந்ததையும் குறிப்பிடுகிறது.

### ஏற்றுமதியும் இறக்குமதியும்

- பண்டைக் காலத்து வாணிகப் பொருள்கள் துறைமுக நகரங்களிலிருந்து ஏற்றுமதியாயின. பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் அவற்றைக் கூறும்.
- காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் பொருள்கள் மண்டியும் மயங்கியும் கிடந்ததைப் பின்வரும் பட்டினப்பாலை வரிகள் விளக்கும்.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
..... ..... .....
..... மயங்கிய நனந்தலை மறுகு

### உழவுத் தொழில்

- ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ - திருக்குறள்.
- உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது.
- மருதநிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

### பழந்தமிழர் வாழ்வு

- அறத்தினடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு; அறத்தின் வழியே பொருளைக் கண்டது; அவ்வறத்தின் வழியே இன்பத்தையும் எட்டியது. அக்காலத்தே அறம், பொருள், இன்ப வாழ்வைத் தமிழர் பெற்றிருந்தனர்.
- அறத்தைக் கைக்கொண்டதால் வீடு என ஒன்று வேண்டாததாயிற்று.
- பழந்தமிழர் அன்பைப் போற்றியது போலவே வீரத்தையும் ஏற்றிப் போற்றினர்.
- ‘களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே’ என்னும் புறப்பாடல் வீரத்தை முதற்கடமையாக்குகிறது.
- வீரமற்ற ஆடவரை அக்காலப் பெண்டிர் மணந்துகொள்ள விழையார்.
- ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற்புலவர் பெண்களின் பெருவீரத்தைப் பாடுகிறார்.

## திராவிட மொழிகள்:

### I. இந்திய மொழிக்குடும்பங்கள்:

- இந்தோ-ஆசிய மொழிகள் திராவிட மொழிகள் ஆஸ்திரோ-ஆசிய மொழிகள் சீன-திபெத்தில் மொழிகள்.
- நம் நாட்டில் 1300க்கும் மேற்பட்ட மொழிகள் உண்டு
- இந்திய நாட்டை ‘மொழிகளின் காட்சிசாலை’ எனக் குறிப்பிடுகிறார் மொழியியல் பேராசிரியர் ச.அகத்திய லிங்கம். [India – Museum of Language]
- இந்தியாவில் மொத்தம் 12 மொழிக்குடும்பங்கள் உள்ளன. அவற்றுள் 325 மொழிகள் உள்ளன.

### திராவிட மொழிக்குடும்பங்கள்

- 23-க்கும் மேற்பட்ட திராவிட மொழிகள் உள்ளன.

**வகைகள்**

| தென் திராவிட மொழிகள் | நடுத்திராவிட மொழிகள் | வட திராவிட மொழிகள் |
|---|---|---|
| தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா | தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, ஜதபு | குரூக் மால்கோ பிராகுய் |

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்-திராவிடப் பெருமொழிகள்.

### II. திராவிடம்

- இந்திய நாகரிகம் -கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னரே பரந்து விரிந்திருந்தது. திராவிட நாகரிகம் - பழம்பெரும் நாகரிகம்.
- கால்டுவெல் - தமது “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்” எனும் நூலில் திராவிடம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.
- குமாரிலபட்டர் - திராவிடம் எனும் சொல்லை முதன்முதலில் உருவாக்கினார். பயன்பாட்டிற்கு கொண்டு வந்தவர் - கால்டுவெல்.
- இலெமூரியாக் கண்டம்: கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ் குமரிக்கண்டம்.
- ஈரான் பாதிரியார் - ‘திராவிட’ என்னும் சொல் ‘தமிழ்’ என்னும் சொல்லிலிருந்து உருவானது என்று கூறுகிறார். (தமிழ் , திரமிலி , திரவிட , திராவிட)
- தொல்காப்பியம் - தமிழ் இலக்கண நூல்
- 80மூ அளவிற்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிட மொழி – தமிழ்.

### III. செவ்வியல்மொழி:

தொன்மை, தனித்தன்மை, மொழிகளின் தாய், சொல்வளம் இலக்கிய இலக்கண வளம், சிந்தனைவளம், கலைவளம், பண்பாட்டுவளம் இவற்றுடன் பன்னாட்டு மொழியாக விளங்கும் தன்மையைப் பெற்ற மொழியே.

மொழிகள் பல தோன்றி வளர அடிப்படையான மொழியை மூலமொழி என்பர். அம்மூலமொழியிலிருந்து தோன்றி வளரும் மொழியை கிளைமொழி என்பர்.

NATRAJ INSTITUTE OF TNPSC

**மொழி நடை தொடர்பான செய்திகள்**

**கல்வியே அழியாச் செல்வம் – மறைமலையடிகள்**

**வெள்ளத்தால் அழியாது வெந் தழலால்**
**வேகாது வேந்த ராலுங்**
**கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்**
**நிறைவன்றிக் குறைவு றாது**
**கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ**
**மிகஎளிது கல்வி யென்னும்**
**உள்ளத்தே பொருளிருக்கப் புறம்பாகப்**
**பொருள்தேடி யுழல்கின் றாரே.**

**வீரச்சுவை – ந.மு. வேங்கடசாமி நாட்டார்**

**3. காளத்திவேடனும் கங்கைவேடனும் – ரா.பி. சேதுப்பிள்ளை**

**உயர்தனிச் செம்மொழி – பரிதிமாற் கலைஞர்**

**வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார்**

**கவிதை – பேராசிரியர். எஸ். வையாபுரிப்பிள்ளை**

**உ.வே.சா.(தமிழ்த்தாத்தா)**

பனை ஓலையைப் பக்குவப்படுத்தி அதில் எழுத்தாணி கொண்டு எழுதுவார்கள். அவ்வாறு எழுதப்பட்ட ஓலைக்கு **'ஓலைச்சுவடி'** என்று பெயர்.

அக்காலத்தில் செய்யுள், இலக்கணம் முதலியன ஓலைச்சுவடிகளில்தான் எழுதப்பட்டன.

- ➢ ஆணியால் ஓலையில் எழுதும்போது ஓலை கிழியாமல் எழுதவேண்டும்.
- ➢ ஓலைச்சுவடி எழுத்துக்களில் புள்ளி இருக்காது;
- ➢ ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு வேறுபாடு இருக்காது.
- ➢ 'பேரன்' என்பதைப் 'பெரன' என்றும் வாசிக்கலாம். பேரன என்றும் வாசிக்கலாம்.
- ➢ முன்னும் பின்னும் உள்ள வரிகளை வைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.

- ❖ பிறந்த ஊர் - திருவாரூர் மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம்.
- ❖ இயற்பெயர் - வேங்கடரத்தினம்.
- ❖ ஆசிரியரின் பெயர் -மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை
- ❖ அவருடைய ஆசிரியர் அவருக்கு வைத்த பெயர் சாமிநாதன். அதனால் அவர், உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகனான சாமிநாதன் என்பதன் சுருக்கமாக உ.வே.சா. என்றழைக்கப்பட்டார்.
- ❖ 19.02.1855 ஆம் ஆண்டு பிறந்த அவர், 28.04.1942 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
- ❖ தம் வாழ்க்கை வரலாற்றை ஆனந்த விகடன் இதழில் தொடராக எழுதினார். அது **'என் சரிதம்'** என்னும் பெயரில் நூலாக வெளி வந்தது.

**சிறப்புக் குறிப்புகள்**

- ❖ உ.வே.சா.அவர்களின் பெயரால் 1942 இல் நிறுவப்பட்ட டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம் சென்னையில் உள்ள பெசன்ட் நகரில் இருக்கும்.
- ❖ உ.வே.சா அவர்களின் தமிழ்ப் பணிகளை வெளிநாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், சூலியல் வின்சோன் ஆகியோர் பெரிதும் பாராட்டியுள்ளார்.
- ❖ நடுவண் அரசு, உ.வே.சா. அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பெருமைப்படுத்தும் வகையில் 2006ஆம் ஆண்டு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்பித்து உள்ளது.

**மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

தமிழ்ப்பாடம் சொல்லிச் சொல்லி மாணவர்களைத் தமிழின்பால் ஈர்த்தவர்.

- ❖ பிறந்த நாள்: ஏப்ரல் 6,1815
- ❖ ஊர்: திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எண்ணெய்க்கிராமம்
- ❖ பெற்றோர்: சிதம்பரம்-அன்னத்தாச்சியார்
- ❖ இளமையில் தமது தந்தையாரிடம் தமிழ் கற்றார்.
- ❖ இலக்கிய இலக்கண நூல்களில் நன்கு புலமை பெற்றார்.
- ❖ சிறுவயதிலேயே செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்றார்.

**தமிழ் கற்பித்தல்**

**குலாம்காதர் நாவலர், சவரிராயலு, தியாகராசர், சாமிநாதர்** ஆகியோர், அவர்களுள் குறிப்பிடத்தக்க மாணவர்கள்.

திருவாவடுதுறையில் ஆதீன வித்துவானாக இருக்க வேண்டுமென்று ஆதீனத் தலைவர், மீனாட்சிசுந்தரனாருக்கு அழைப்பு விடுத்தார். மீனாட்சிசுந்தரனார் அப்பதவியில் சிலகாலம் இருந்து அரும்பணி ஆற்றினார்.

இவர் திருவாவடுதுறையில் வாழ்ந்த காலத்தில்தான் உ.வே.சாமிநாதருக்கு ஆசிரியராக இருந்தார்.

**தமிழ்த்தொண்டு**

- ❖ 80-க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.
- ❖ தமிழகத்திலுள்ள பல்வேறு கோவில்களுக்கு நடைப்பயணம் மேற்கொண்டு அக்கோவில்களைப் பற்றிப் பாடித் **தலபுராணங்கள்** பல இயற்றியுள்ளார். அத்தல புராணங்களில் **கோவில் வரலாறு, சிறப்புகள், இறைவனின் பெருமைகள்** முதலியன இடம்பெற்றுள்ளன.
- ❖ **'நோய்க்கு மருந்து இலக்கியம்'** என்றார்.

NATRAJ INSTITUTE OF TNPSC

- 01.02.1876 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## குடிமக்கள் காப்பியம்

**- தெ,பொ, மீனாட்சி சுந்தரனார்**

வடமொழியில் இதிகாவியம் என்று புகழப்பெறுவது வான்மீகியின் இராமாயணமே,

கிரேக்கர்கள் பழங்காப்பியம் எனப் பாராட்டுவது **ஹோமரின் 'இலியட்'** என்பதேயாம்.

**வர்ஜில் என்ற பாவாணர் பாடிய ஈனிட்** என்பதே இலத்தீன் மொழியின் பழங்காப்பியமாகும்.

குறம் பாடினாலும். அது மீனாட்சி குறமாக முடிகிறது,

குறவஞ்சி பாடினாலும் அது சரபேந்திரர் குறவஞ்சியாக நீண்டு ஒடுகிறது.

குடிமக்கள் வழியாகவே தமிழ்நாட்டின் ஒருமை ஒங்கி வளரக் காண்கிறார் இளங்கோவடிகள்.

காதலும், அழுகையும், வீரமும் காப்பியப் பெருஞ்சுவைகள், மாதவியும் கோவலனும் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்கின்ற காதல் வாழ்வே சிலப்பதிகாரப் புகார்க் காண்டம். கணவனை இழந்த கண்ணகியே அவலச் சுவையின் இழத்தைக் காட்டுகிற கதைதான் மதுரைக் காண்டம், கண்ணகிக்காக எடுத்த கலனை வடவரசர் தலைமீது ஏற்றிவந்த செங்குட்டுவனது வீரத்தைப் பாடுவதே வஞ்சிக் காண்டம்.

NATRAJ INSTITUTE OF TNPSC

## அகரமுதலி(அகராதி)

அகரம்+ஆதி =அகராதி

ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் அகரவரிசையில் அமையும்படி ஒரு சேரத் தொகுத்து விளக்கும் நூல் அகராதி என்பர்.

## நிகண்டுகள்

தமிழ் அகரமுதலி வரலாற்றில்,**சொற்பொருள் துறை நூல்கள் நிகண்டுகள்.**

நிகண்டுகளில் பழைமையானது **சேந்தன் திவாகரம்.**

இதன் ஆசிரியர் திவாகரர்.

25 நிகண்டுகள் தோன்றியுள்ளன.

**சிறப்பான நிகண்டு – மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு.**

## அகரமுதலி

திருமூலரின் **திருமந்திரத்தில்** அகராதி என்னும் சொல் முதன்முதலாக இடம் பெற்றுள்ளது.

நிகண்டுகளுள் ஒன்றான **'அகராதி நிகண்டில்'** இச்சொல் அடைமொழியாக அமைந்துள்ளது.

- இந்நூலே அகரமுதலிகள் தோன்றுவதற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம்.
- இந்நூலில் சொற்களின் முதலெழுத்துகள் மட்டுமே அகரவரிசையில் அமைந்திருக்கின்றன.

## சதுரகராதி

**வீரமாமுனிவரின் சதுரகராதியே** தமிழில் தோன்றிய முதல் அகரமுதலி.

கி.பி. 1732 ஆம் ஆண்டு வெளிவந்தது.

சதுர்(நான்கு என்பது பொருள்) இந்நூலில் பெயர், பொருள், தொகை, தொடை என நான்கு வகைகளில் தனித்தனியாகப் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

வீரமாமுனிவரின் அகரமுதலிகள்

**தமிழ் – இலத்தீன் அகராதி,**
**இலத்தீன் – தமிழ் அகராதி,**
**தமிழ் – பிரெஞ்சு அகராதி,**
**பிரெஞ்சு – தமிழ் அகராதி,**
**போர்த்துகீசிய – இலத்தீன் – தமிழ் அகராதி**

## பிற அகரமுதலிகள்

- **தமிழ் – தமிழ் அகராதி ஒன்று லெவி – ஸ்பால்டிஸ்** என்பவரால் வெளியிடப்பட்டது.
- **யாழ்ப்பாணம் கதிரைவேலனாரால் தமிழ்ச் சொல்லகாராதி** வெளியிடப்பட்டது. இது **சங்க அகராதி** எனவும் அழைக்கப்பட்டது.
- **தமிழ்ப் பேரகராதி** - குப்புசாமி தொகுத்து வெளியிட்டார்.
- **இராமநாதன்** - **படங்களுடன் கூடிய** ஓர் அகரமுதலியை வெளியிட்டார். இந்நூல் **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி** எனும் பெயருடன் வெளிவந்தது.
- **வின்சுலோ – தமிழ் – ஆங்கிலப் பேரகராதி**(1925),**மதுரைத் தமிழ்ப் பேரகராதியும்**(1937) வெளிவந்தன.
- **மு. சண்முகம் – தமிழ் – தமிழ் அகரமுதலி**(1985) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.
- 20-ம் நூற்றாண்டில் வெளிவந்த மிகப்பெரிய அகரமுதலி **சென்னைப் பல்கலைக்கழக அகராதி.** இவ்வகரமுதலி **'தமிழ் லெக்சிகன்'** என்னும் பெயரில் ஆறு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது.

## செந்தமிழ்ச் சொற்பிறப்பில் அகரமுதலி

**தேவநேயப்பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின்**(1985) முதல் தொகுதி வெளிவந்தது.

ஒவ்வொரு சொல்லின் சொற்பிறப்பும், இனமொழிச் சொற்களுக்கான குறிப்பும் தரப்பட்டுள்ளன.

படங்களைத் தந்த இரண்டாவது அகரமுதலி இதுவேயாகும்.

முழுமையாகக் கணினி உதவியுடன் உருவாக்கப்பட்டு வெளிவந்த முதல் தமிழ் அகரமுதலி **கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.** விளக்கச் சொற்பொருளோடு வந்த முதல் அகரமுதலி.

## கலைக்களஞ்சியம்

**அபிதான கோசம்(1992)** தமிழ்க் கலைக்களஞ்சியங்களின் முன்னோடி.

இலக்கியப் புராண இதிகாசச் செய்திகளைக் கொண்டு இலக்கியத் களஞ்சியமாகத் திகழ்கின்றது.

அபிதான சிந்தாமணி இலக்கியச் செய்திகளோடு அறிவியல் துறைப் பொருள்களையும் முதன்முதலாகச் சேர்த்து விளக்கம் தந்து 1934 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இதனைச் **சிங்காரவேலனார்** தொகுத்து வெளியிட்டார்.

தமிழ் வளர்ச்சிக் கழகம் முறையான முதல் கலைக்களஞ்சியத்தைத் தொகுத்து வெளியிட்டுள்ளது.

இக்கழகம் குழந்தைகள் கலைக்களஞ்சியம், நாடகக் கலைக்களஞ்சியம், இசுலாமிய கலைக்களஞ்சியம் முதலிய பல கலைக்களஞ்சியங்களையும் வெளியிட்டுள்ளது.

**கலைச்சொல் அகரமுதலி**

கலைக்கதிர் நிறுவன முயற்சியால் பொதுஅறிவு, உளவியல், புவியியல், புள்ளியியல், வரலாறு, வானவியல் முதலிய துறைகளுக்கும் கலைச்சொல் அகரமுதலிகள் 1960 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டன. **மணவை முஸ்தபா அறிவியல் சார்ந்த துறைவாரியான கலைச்சொல் அகரமுதலிகளைத்** தொகுத்து வெளியிட்டுள்ளார்.

அறிவியல் கலைச்சொல் களஞ்சியம் 1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

**ஆவுந் தமிழரும் – மொழிஞாயிறு. தேவநேயப்பாவாணர்**

**ஜி.யு. போப்:-** (George Uklay Pope)

- ❖ ஆங்கிலேயர். கி.பி. 1820 ஆம் ஆண்டு, பிரான்சு நாட்டின் எட்வர்டு தீவில் ஜான் போப்புக்கும், கெதரின் யுளாபுக்கும் மகனாகப் பிறந்தார்.
- ❖ பணியிடங்கள்- திருநெல்வேலி (சாயர்புரம்), சென்னை சாந்தோம், தஞ்சாவூர், உதகமண்டலம், பெங்களூர்
- ❖ ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக தமிழ் & தெலுங்கு பேராசிரியர்
- ❖ தம் கல்லறையில் 'தமிழ் மாணவன்' என எழுதப் பணித்தார்
- ❖ மகாவித்துவான் இராமானுசக் கவிராயரிடம் தமிழ் கற்றார்
- ❖ திருவாசகம், நாலடியார், திருக்குறள்(1886 – ல்), சிவஞானபோதம், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- ❖ தமிழ்ச் செய்யுள்களைத் தொகுத்து '**தமிழ்ச் செய்யுட் கலம்பகம்**' என அச்சிட்டு வெளியிட்டார்
- ❖ இயற்றிய நூல்கள் -'தொடர்மொழி இலக்கணம்'.
- ❖ 'இந்தியன் சஞ்சிகை','இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு' ஆகிய இதழ்களில் தமிழ் பற்றிய ஆங்கிலக் கட்டுரைகள் எழுதினார்.
- ❖ புறநானூற்றுப் பாடல்கள், புறப்பொருள் வெண்பாமாலைத் நினைவிளக்கம், தமிழ்ப்புலவர் வரலாறு ஆகியவைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார்
- ❖ தமிழ்-ஆங்கிலம் மற்றும் ஆங்கிலம்-தமிழ் அகராதியை வெளியிட்டார்
- ❖ போப், தம்முடைய பத்தொன்பதாம் அகவையில் தமிழகத்தில் சமயப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பாய்மரக் கப்பலில் சென்னை வந்துசேர எட்டுத்திங்களாயின. அந்த எட்டுத்திங்களையும் வீணே கழிக்காமல், தமிழ் நூல்களையும், வடமொழி நூல்களையும் படித்தார்.
- ❖ சமயக்கல்லூரியில் தமிழ் இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்கள் முதலியவற்றையும் கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் முதலிய மொழிகளையும் கற்றுத்தர ஏற்பாடு செய்தார். கணிதம், அறிவாய்வு (தருக்கம்), மெய்யறிவு (தத்துவம்) ஆகியவற்றைக் கற்பிக்கும் கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றினார்.
- ❖ இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு முதலான ஏடுகளில், தமிழ்மொழிபற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார். அக்கட்டுரைகளில் புறநானூற்றுப் பாடல்களும், புறப்பொருள் வெண்பாமாலைத் திணை விளக்கங்களும், தமிழ்ப்புலவர் வரலாறும் இடம்பெற்றிருந்தன.
- ❖ உயர்ந்த பண்பாட்டுக்குரிய பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றை விளக்கும் அறுநூறு செய்யுள்களை, நீதிநூலிகளிலிருந்து ஆய்ந்தெடுத்துத் '**தமிழ்ச் செய்யுட் கலம்பகம்**' என்னும் நூலாகத் தொகுத்ததோடு அந்தப் பாக்களுக்கு விளக்கமும் தந்துள்ளார்.
- ❖ பள்ளியில் படிக்கும் குழந்தைகள், பெரியவர்கள் கற்கும் வகையில் இலக்கணத்தை நன்கு அறிந்து கொள்ளும் வகையில் வினா விடை முறையில் அமைந்த இரு இலக்கண நூல்களை அவர் எழுதினார்.
- ❖ மேலைநாட்டார் தமிழை எளிதில் கற்றுக்கொள்ளும் வகையில் தமிழ் - ஆங்கில அகராதி ஒன்றையும், ஆங்கிலம் - தமிழ் அகராதி ஒன்றையும் போப் வெளியிட்டார்.
- ❖ தமிழில் வரலாற்று நூல்களையும் எழுதினார்
- ❖ பழைய தமிழ் இலக்கியங்களிலிருந்து சில செய்யுள்களைத் தொகுத்து நூலாக

NATRAJ INSTITUTE OF TNPSC

வெளியிட்டு, அதனைப் பாடநூலாக வைக்க ஏற்பாடு செய்தார். தமிழில் உரைநடை நூல் ஒன்றையும் எழுதினார்.

- ❖ 1858 ஆம் ஆண்டில் உதகமண்டலம் சென்ற அவர், பள்ளி ஒன்றைத் தொடங்கி அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார்.
- ❖ தாயகத்திற்குச் சென்ற போப், 1885 முதல் 1908 ஆம் ஆண்டுவரை இருபத்து மூன்றாண்டுகளாக இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
- ❖ தம் இறுதிக்காலத்தில் புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் முதலிய நூல்களையும் பதிப்பித்தார்.
- ❖ 1908 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினொன்றாம் நாள் தம் இன்னுயிரை நீத்தார்.

### வீரமாமுனிவர்

- ➢ இயற்பெயர் - கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி
- ➢ இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்
- ➢ தெரிந்த மொழிகள் - இத்தாலி, லத்தீன், பிரெஞ்சு, கிரேக்கம், எபிரேயம்
- ➢ மதுரையில் தங்கி – தமிழ், வடமொழி, தெலுங்கு கற்றார்
- ➢ 'நீட்டல் கழித்தல் குறில் மெய்க் கருபுள்ளி' என்ற மாற்றம் செய்து தமிழ் நெடுங்கணக்கில் எகர, ஏகார, ஒகர, ஓகார எழுத்து வடிவாகச் சீர்திருத்தம் செய்தார்
- ➢ நிறுத்தப்புள்ளி, முற்றுப்புள்ளி அறிமுகம் செய்தார்
- ➢ குறில் நெடில் மாற்றம் செய்தார்
- ➢ **இயற்றிய நூல்கள்:** தமிழில் ஐந்திலக்கணங்களைத் தொகுத்து 'தொன்னூல் விளக்கம்' (குட்டித் தொல்காப்பியம்) எழுதி அதற்கு உரையும் தந்தார்
  சதுரகராதி– தமிழில் முதல் அகராதி
  கொடுந்தமிழ் இலக்கணம் - இலத்தீனில் எழுதினார்- வெளிநாட்டவர் எளிதில் தமிழ் கற்றுக் கொள்ள
  பரமார்த்த குரு கதை– கிண்டல், நகைச்சுவை, பெற்ற கொடுத்தமிழில் எழுதினார்
- ➢ திருக்குறளின் அறம், பொருள் ஆகிய அதிகாரங்களை இலத்தீனில் மொழி பெயர்த்தார்
- ➢ **சிற்றிலக்கிய நூல்கள்:-** திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரி அம்மாள் அம்மானை, அடைக்கலமாலை, கலிவெண்பாமாலை
- ➢ **உரைநடைநூல்கள்:-** வேத விளக்கம், ஞானபதேசம், வேதியர் ஒழுக்கம், பர்வத காண்டம், வாமன் கதை, திருச்சபைக் கணிதம்
- ➢ **சிறப்புப்பெயர்:-** தமிழ் அகராதியின் தந்தை
- ➢ **இயற்றிய அகராதிகள்** - அகரமுதலிகள்
  **தமிழ் – இலத்தீன் அகராதி,**
  **இலத்தீன் – தமிழ் அகராதி,**
  **தமிழ் – பிரெஞ்சு அகராதி,**
  **பிரெஞ்சு – தமிழ் அகராதி,**
  **போர்த்துகீசிய – இலத்தீன் – தமிழ் அகராதி**
- ❖ **'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை** இவரைப்பற்றி
  'தேம்பாவணி, காவலூர்க் கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கிறது'
  'தொன்னூல் - பொன்னூல், சதுரகராதி – முத்தாரம்'
  'வீரமாமுனிவர் - தமிழ் முனிவர்களுள் ஒருவர்'

எனப் புகழ்கிறார்.

### காமராசர்

- ❖ தன்னலமற்ற தலைவர் , கர்மவீரர் , கல்விக்கண் திறந்த முதல்வர் , ஏழைப்பங்காளர் , பெருந்தலைவர் , தலைவர்களை உருவாக்குபவர் (king maker).
- ❖ விருதுநகரில் குமாரசாமி, சிவகாமி இணையர்க்கு மகனாய் 1903 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15ஆம் நாளன்று தோன்றினார்.
- ❖ இளமையில் தேசிய இயக்கமான காங்கிரசில் சேர்ந்து, அதன் தொண்டராகத் தம் அரசியல் வாழ்வினைத் தொடங்கினார்.
- ❖ சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு ஆகிய போராட்டங்களில் பங்குகொண்டார், சிறை சென்றார். பதினோராண்டுகள் சிறையில் கழித்தார்.
- ❖ அவரது தன்னலமற்ற உழைப்பைக்கண்ட தலைவர் சத்தியமூர்த்தி, காமராசரைக் கட்சியின் செயலாளராக நியமித்தார். சத்தியமூர்த்தி – அரசியல் குரு
- ❖ 1937இல் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ❖ 1939 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பன்னிரண்டு ஆண்டுகள் அப்பதவியில் இருந்தார்.
- ❖ 1945இல் பிரகாசம் தலைமையில் அமைச்சரவையும், 1947இல் ஓமந்தூர் இராமசாமி அமைச்சரவையும், 1949இல் குமாரசாமி அமைச்சரவையும் பதவியேற்க இவர் காரணமாக இருந்தார்.
- ❖ அதனால், தலைவர்களை உருவாக்குபவர்(king maker) என இவர் அழைக்கப்பட்டார்.

**முதலமைச்சர் காமராசர்**

NATRAJ INSTITUTE OF TNPSC

1954இல் இராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதும் காமராசர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1963இல் தாமாகப் பதவி விலகும்வரை அப்பதவியில் திறம்படச் செயல்பட்டார். காமராசர் ஆட்சிக் காலத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் தொழிலமைச்சராகவும், சி.சுப்பிரமணியம் கல்வியமைச்சராகவும் இருந்து அவருக்கு உறுதுணையாகப் பணியாற்றினார்.

**தொழில் முன்னேற்றம்**

- முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.
- கிண்டி, அம்பத்தூர், இராணிப்பேட்டை தொழிற்பேட்டைகளும் மாவட்டந்தோறும் சிறிய தொழிற்பேட்டைகளும் அமைக்கப் பெற்றன.
- வேளாண்மைக்கெனப் பாசனவசதிகள் செய்யப்பட்டன.
- அணைகள் கட்டப்பட்டன.
- கூட்டுறவு இயக்கம் வேரூன்றியது. அதனால், தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத சிற்றூர்களே இல்லை என்னும் நிலை உருவானது.
- நெசவுத்தொழில் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைத் தீட்டினார்.
- நெய்வேலி, நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, கிண்டி அறுவைசிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, சர்க்கரை ஆலை, சோடா உப்புத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, ஆவடி இரயில்வே வாகனத் தொழிற்சாலை, மேட்டூர்க் காகிதத் தொழிற்சாலை முதலியன இவரது ஆட்சியில் தொடங்கப்பெற்றன.

**கல்விப் புரட்சி**

- கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது.
- தெருதோறும் தொடக்கப்பள்ளி, ஊர் தோறும் உயர்நிலைப்பள்ளி என்பதே அவரது நோக்கமாக அமைந்தது.
- பள்ளி வேலைநாள்களை நூற்றெண்பதிலிருந்து இருநூறாக உயர்த்தினார் காமராசர்.
- தொடக்கப் பள்ளிகளில் **மதிய உணவுத் திட்டம்** இவரால் தொடங்கப்பட்டது.
- **பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்** நடத்தப்பட்டுப் பள்ளிகளுக்கான அடிப்படைப் பொருள்களும் கருவிகளும் பெறப்பட்டன.
- **உயர்நிலைப் பள்ளிவரை இலவசக் கல்வி** கொண்டுவரப்பட்டது.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டது.
- உடற்பயிற்சிக் கல்லூரிகளும் ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் திறக்கப்பட்டன.
- மருத்துவக் கல்லூரி முதலான தொழிற்கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடனளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**சமூக முன்னேற்றத் திட்டங்கள்**

- தஞ்சாவூர்ப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தி, சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு 60% பங்கு கிடைக்க வழிவகை செய்தார்.
- நிலச்சீர்திருத்தம் இவரால் கொண்டுவரப்பட்டது.
  நில உச்சவரம்பு 30 ஏக்கர் எனக் குறைக்கப்பட்டது.
  நில முதலாளிகளிடமிருந்து உபரிநிலங்கள் பெறப்பட்டு நிலமில்லாதோருக்கு அவை பிரித்தளிக்கப்பட்டன.
- மீனவர், கருப்புக்கட்டி காய்ச்சுபவர், கைத்தறியாளர், குயவர் முதலிய சிறுதொழிலாளர் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- மக்கள் நலத்திட்டங்களில் ஓய்வூதியம் குறிப்பிடத்தக்கது. நகர்ப்புற வீடுகட்டும் திட்டம்
- இலவச மருத்துவவசதி

**காமராசர் திட்டம்(K plan)**

- "கட்சியை வலுப்படுத்த மூத்த தலைவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப்பணியில் ஈடுபடவேண்டும்"
- பிரதமர் நேரு, இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டார்.
- முதலில் காமராசர் தாமே முதலமைச்சர் பதவியைவிட்டு விலகிக் கட்சிப்பணிக்குத் திரும்பினார்.
- மொரார்ஜி தேசாய், லால்பகதூர் சாஸ்திரி முதலியோரும் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணிகளில் ஈடுபட்டனர்.

**அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர்**

- புவனேசுவர் நகரில் 1963 ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசு மாநாட்டில் காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராகப் பதவியேற்றார்.
- இரஷ்யாவிற்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அந்நாட்டுத் தொழில் முன்னேற்றங்களை நேரில் கண்டார். அவற்றை நம் நாட்டிலும் செயல்படுத்த முனைந்தார்.
- தம் தலைமையையும் செல்வாக்கையும் பயன்படுத்தி, இருமுறை பிரதமர்களை உருவாக்கினார்.

**காமராசருக்குச் செய்த சிறப்புகள்**

- நடுவணரசு **பாரத ரத்னா விருது** அளித்துச் சிறப்பித்தது.
- நாடாளுமன்றத்தில் இவருக்கு ஆளுயர வெண்கலச்சிலை
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
- கன்னியாகுமரியில் காமராசர் மணிமண்டபம் கட்டியது
- சென்னை மெரீனா கடங்கரைச் சாலையில் சிலை
- சென்னை இல்லம் – நினைவு இல்லம்
- தேனாம்பேட்டையில் காமராசர் அரங்கம்
- பிறந்த நாளான ஜூலை 15 ஆம் நாள் – **கல்வி வளர்ச்சி நாள்**

**மறைவு**

NATRAJ INSTITUTE OF TNPSC

1972 ஆம் ஆண்டு காந்தியடிகளின் பிறந்தநாளான அக்டோபர் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## தேசியம் காத்த செம்மல்- பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

- இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் 1908 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் பிறந்தவர்.
- இவருடைய தந்தையார் திரு. உக்கிரபாண்டித் தேவர், தாயார் திருமதி இந்திராணி அம்மையார்.
- கற்பித்த ஆசிரியர் - குறைவற வாசித்தான் பிள்ளை.
- தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வல்லமை பெற்றார்.
- சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகியனவற்றைக் கற்றறிந்தார்.
- இளமையிலேயே அரசியலில் ஆர்வங்கொண்டார்.
- **பொதுத் தொண்டு** -
  - 32 சிற்றூர்களில் தமக்குச் சொந்தமாக இருந்த நிலங்களை உழுபவர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தார்.
  - நிலக்கிழார் ஒழிப்பிலும், ஆலய நுழைவுப் போராட்டத்திலும் முன்னின்ற வீரர் ஆவார்.
  - சமபந்தி முறைக்கும் ஊக்கமளித்த பெருமகன்.
  - இவர் காலத்தில் ஆங்கில அரசு, மக்களுள் சிலரைக் குற்றப்பரம்பரை என ஒதுக்கி வைத்திருந்தது. குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து அவர்களை விடுதலை பெறச் செய்தார்.
  - "சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை, ஆண்டவன் மனித குலத்தைத்தான் படைத்தானே தவிரச் சாதியையும் நிறத்தையும் அல்ல, சாதியும் நிறமும் அரசியலுக்குமில்லை, ஆன்மிகத்திற்கும் இல்லை" எனச் சாதியைப் பற்றிக் கூறியுள்ளார்.

### நாட்டுப் பற்று

- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் - அரசியல் வழிகாட்டி
- விடுதலைப்போர் கடுமையாக இருந்த நாள்களில் ஆங்கில அரசு, வட இந்தியாவில் திலகருக்கும் தென்னிந்தியாவில் முத்துராமலிங்கத் தேவருக்கும் வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது.
- மக்களிடையே விடுதலை வேட்கையின் ஊட்டியவர்
- '**தேசியம் காத்த செம்மல்**' என்று திரு.வி.க. பாராட்டியுள்ளார்.

### அரசியல் வாழ்க்கை

தேர்தலில் போட்டியிட்ட ஐந்து முறைகளிலும் வெற்றிவாகையினையே சூடினார். (1937, 1946, 1952, 1957, 1962)

### பலரும் போற்றும் பண்பாளர்

- தெய்வீகம், தேசியம் ஆகிய இரண்டையும் இரு கண்களாகப் போற்றியவர்.
- "வீரமில்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும்" என எடுத்துரைத்தார்.
- இவர் சமயச் சான்றோராகவும் கருதப்பட்டார்.
- **வேதாந்த பாஸ்கர், பிரணவ கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்த சமய மேதை** எனப் பலவாறாகப் பாராட்டப்பெற்றவர்.
- அனைத்து மதத்தினரிடத்திலும் அன்பும் பரிவும் காட்டினார்.
- விவேகானந்தரின் தூதராக, நேதாஜியின் தளபதியாக, சத்திய சீலராக, முருக பக்தராக, ஆன்மிகப் புத்திரராக, தமிழ்பாடும் சித்தராக, தென்பாண்டிச் சீமையின் முடிசூடா மன்னராக, நீதி வழுவா நேர்மையாளராக, புலமையில் கபிலராக, வலிமையில் கரிகாலனாக, கொடையில் கர்ணனாக, பக்தியில் பரமஹம்சராக, இந்தியத் தாயின் நன்மகனாக வாழ்ந்தவர்.
- "பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு. வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு' என்று கூறியுள்ளார்.
- "மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள்" எனக் குறிப்பிடுகிறார்.

**மறைவு:** 1963 ஆம் ஆண்டு அக்டோபர் 30

### நினைவுச்சின்னம்

சென்னை மாநகரில் உருவச் சிலை
அச்சிலை நிறுவப்பட்டுள்ள சாலைக்கு இவர் பெயர்.

### சிறப்புக் குறிப்புகள்

தேவரின் விருப்பத்திற்கிணங்க 06.09.1939இல் மதுரைக்கு நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் வருகை தந்தார்.
நடுவண் அரசு 1995இல் முத்துராமலிங்கத் தேவருடைய அஞ்சல்தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.
தம் சொத்துக்கள் முழுவதையும் 17 பாகங்களாகப் பிரித்து, ஒரு பாகத்தை மட்டும் தனக்கு வைத்துக்கொண்டு மீதி 16 பாகங்களையும் 16 பேர்களுக்கு இனாம் சாசனமாக எழுதி வைத்தார்.

## பெரியார்

பெரியாரைப் பற்றிய பாவேந்தரின் வரிகள்ஹ

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்

NATRAJ INSTITUTE OF TNPSC

பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் இரண்டு வகை.

1. அடிப்படைத் தேவைகள். 2. அகற்றப்படவேண்டியவை.

பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி ஆகியன அடிப்படைத் தேவைகள்.

குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு ஆகியன அகற்றப்படவேண்டியவை.

**பெண்கல்வி**

'நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது. அப்படி மாறுதல்கள் ஏற்பட்டாலும் அதனால் பயனொன்றும் விளையாது. பெண்கள் மனிதப் பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு வெளியேற்ற வேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று. சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததும் ஆகும். பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது' என்று எடுத்துரைத்தார்.

"ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்கவேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும். நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை. இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்" என்றார்.

**பெண்ணுரிமை**

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர்.

ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தவர்.

பெண்கள் தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**சொத்துரிமை**

பெண்களுக்கு வழிவழிவரும் சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு அடிகோலியது என்று உணர்ந்தார். அதற்காக, அவர்கள் போராடவும் கிளர்ச்சி செய்யவும் வேண்டுமெனக் கூறினார்.

"பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்து விட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவகையான அடிமைத்தனங்களும் ஒழிந்துபோகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். ஆதலால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாத உடனடிச் செயலாகும்" என்று தம் கட்டுரைகளில் எழுதியும் பேசியும் வந்தார்.

**அரசுப்பணி**

'பெண்களுக்கு எவ்வகையான உத்தியோகமும், கிடைக்கச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறோம்' என்று பெரியார் சிந்தித்ததை தமிழக அரசு இன்று நடைமுறைப்படுத்தி வருகின்றது.

**அகற்றப்பட வேண்டியவை**

1. சடங்குகளையும் மூடநம்பிக்கைகளையும்
2. பெண்ணுரிமைக்கு ஊறுவிளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை
3. குழந்தை மணம் - "ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமா? இது சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு" எனக்கூறி அதனை நீக்கப்பாடுபட்டார்.

**மணக்கொடை மறுப்பும் கைம்மை ஒழிப்பும்**

மணக்கொடை - பெற்றோர் பலர், தம் மகனின் கல்விக்காகச் செலவழித்த பணம் தங்கள் கடமையைச் சேர்ந்தது எனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகக் கருதிக்கொண்டு, அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கின்றனர்.

"சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான், இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும். தமிழ்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் செக்குமாடுகளாக இல்லாமல், பந்தயக்குதிரைகளாக மாறவேண்டும். தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம் நம் இளைஞர்களிடையே வளரவேண்டும்'

"கணவனை இழந்தோர் மறுமணம் செய்து கொள்வதில் தீங்கில்லை" என்றும் தெரிவித்தார்.

**ஒழுக்கம்**

"ஒரு நாடு வளத்துடன் இருக்கவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும்" என்பது அவர் கருத்து.

- சமூக முரண்களை எதிர்த்தவர்
- மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்
- தொலைநோக்குப் பார்வையுடையவர்
- பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர்
- சமூகமாற்றத்தை விரும்பியவர்
- "பெண்களே சமூகத்தின் கண்கள்" எனக் கருதியவர்
- பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர்.
- பெரியார் வழிகாட்டுதலால் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

NATRAJ INSTITUTE OF TNPSC

## அண்ணல் அம்பேத்கர்

விடுதலைக்கும் சமத்துவத்திற்கும் பாரதியின் வரிகள்ஹ
நிகரென்று கொட்டு முரசே — இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே — பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்

- இந்தியாவே அவரின் வருகைக்காக நாடாளுமன்றத்தில் கூடிநின்று எதிர்பார்த்தது. அவர் கைகளில், இந்தியாவின் எதிர்காலத்தையே உருவாக்கும் **இந்திய அரசியல் சாசனச் சட்ட வரைவு** இருந்தது.
- சமுதாய மறுமலர்ச்சியின் முன்னோடி
- சமத்துவக் காவலர்
- உலகச் சாதனையாளர் வரிசையில் முன்னிற்பவர்
- அரசியல் சட்டமேதை
- தேசியத் தலைவராகவும் திகழ்ந்தவர்
- பல்வேறு மத இன மொழி சமூகப் பழக்கவழக்கங்கள் கொண்ட இந்நாட்டை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஒருங்கிணைத்தவர்.
- **பிறப்பு:** மராட்டிய மாநிலத்தில் கொங்கண் மாவட்டத்தில் உள்ள அம்பவாடே என்னும் சிற்றூர் (ஏப்ரல் 14 1891)
- அவரது தந்தையார் இராம்ஜி சக்பால், தாயார் பீமாபாய்.
- செல்வம் நிறைந்த குடும்பத்தில் 14-வது பிள்ளையாகப் பிறந்தவர்.
- இயற்பெயர் - பீமாராவ் ராம்ஜீ.
- "ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமன்றி அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும்"

**சாதி மதங்களைப் பாரோம் — உயர்**
**ஜென்மம் இத்தேசத்தில் எய்தினர் ஆயின்**
**வேதியர் ஆயினும் ஒன்றே — அன்றி**
**வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே.**

எனும் உயரிய நோக்குடன் செயல்பட்டவர்.
காலத்தினால் செய்த இவ்வுதவியை ஞாலத்தினும் பெரிதெனக் கருதினார்.

- 1908இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் தன்னுடைய உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார்;
- பரோடா மன்னர் பொருளதவியுடன் 1912இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்;
- அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1915இல் முதுகலைப்பட்டமும்
- 1916இல் இலண்டனில் பொருளாதாரத்தில் ஆய்வுப்பட்டமும் பெற்றார்;
- மும்பையில் சிறிதுகாலம் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார்;
- மீண்டும் இலண்டன் சென்று அறிவியல் முதுகலைப்பட்டமும் பாரிஸ்டர்பட்டமும் பெற்றார்.
- அம்பேத்கர் இந்தியா திரும்பியபின் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்;
- கட்டணமின்றி ஏழைகளுக்கு வழக்காடி நீதியைப் பெற்றுத் தந்தார்.

அரசியல், சட்டம், சமூகம், பொருளாதாரம், தத்துவம், வரலாறு, வணிகம், கல்வி, சமயம் என அனைத்துத் துறைகளிலும் நிகரற்ற அறிஞராகத் திகழ்ந்தார்.

### முதல் உரிமைப்போர்

தந்தை பெரியார் 1924 ஆம் ஆண்டு கேரளாவில் வைக்கத்தில் நடத்திய ஒடுக்கப்பட்டோர் ஆலயநுழைவு முயற்சியும், 1927 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 20ஆம் நாள் அம்பேத்கர் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டமும் மனித உரிமைக்காக முதலில் நடத்தப் பெற்ற போராட்டங்கள் எனலாம்.

### விடுதலை உணர்வும் வட்டமேசை மாநாடும்

'இங்கிலாந்து சொல்வதற்கெல்லாம் இந்தியா தலையசைக்கும் என்பது தவறு. இந்த நிலை எப்போதோ மாறிவிட்டது. இந்திய மக்களின் எண்ணங்களை நீங்கள் ஈடேற்ற வேண்டும்' என ஆங்கிலேயரிடம் அச்சமின்றி ஆணித்தரமாகக் கூறினார். முழுமையான விடுதலையைக் கண்டிப்பாக வழங்கவேண்டும். அதற்கு முன்னர்த் தன்னாட்சித் தகுதியை இந்தியாவிற்கு வழங்க வேண்டும் எனவும் அம்பேத்கர் முன்மொழிந்தார்.

வட்டமேசை மாநாடு 1930ஆம் ஆண்டு நடைபெற்றது. அம்மாநாட்டில் அண்ணல் அம்பேத்கர் கலந்துகொண்டார் அம்மாநாட்டில் 'அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினனாக நான் பேசுகிறேன்' என்று தன் கருத்தைத் தொடங்கினார். மாற்றார் ஆதிக்கத்தை நீக்கி மக்களால் ஆளப்படும் மக்களாட்சியையே நாங்கள் விரும்புகிறோம். வெறும் எஜமான மாற்றத்தை நாங்கள் விரும்பவில்லை. எங்கள் கைகளில் அரசியல் அதிகாரம் வந்தாலொழிய எங்கள் குறைகள் நீங்கா என மொழிந்தார். ஒடுக்கப்பட்டோரின் இவ்வுரிமைக்குரல் வட்டமேசை மாநாட்டின் வழியே உலக அரங்கில் எதிரொலித்தது.

### சட்ட மாமேதை

விடுதலைக்குப் பிறகு சுதந்தர இந்திய அமைச்சரவையில் அண்ணல் அம்பேத்கரையும் இடம்பெறச் செய்யவேண்டுமென்று நேரு பெரிதும் விரும்பினார். அம்பேத்கரும் அதற்கு உடன்பட்டார். சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம வகுக்க எழுவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. பலரும் செயல்படாமல் விலகினார். இறுதியில் அம்பேத்கர் ஒருவரே அந்த ஒப்பற்ற பணியைச் செய்து முடித்தார். 1950ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26 ஆம் நாள் இந்தியா முழுமையான குடியரசு நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்டது.

### கல்வி வளர்ச்சியில் அம்பேத்கர்

NATRAJ INSTITUTE OF TNPSC

அறியாமைதான் அனைத்திற்கும் மூலகாரணம் என்பதை அம்பேத்கர் நன்குணர்ந்தார். எனவே,"ஒவ்வொருவரும் முழுமனித நிலையை அடைய கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது. செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம். உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம்' என்றார். மேலும்,'கற்பித்தல் அறிவியல் முறைக்குக் உகந்ததாக இருத்தல்வேண்டும். விருப்புவெறுப்பற்ற முறையில் கற்பித்தல் நிகழ்தல் வேண்டும். மாணவனுக்குள் தகவல்களைத் திணிப்பதாகக் கல்வி இருத்தல் கூடாது. அது அவனது ஊக்கத்தை தூண்டுவதுடன் தனித்தன்மையை வெளிக்கொணர்வதாக இருத்தல்வேண்டும்' என்றும் கற்றல், கற்பித்தலின் உயர்ந்த குறிக்கோள்பற்றி அண்ணல் அம்பேத்கர் குறிப்பிடுவார்.

அவர், 1946 ஆம் ஆண்டு, மக்கள் கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தார். மும்பையில், இவரின் அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவுவளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

**பொருளாதார வல்லுநர்**

அம்பேத்கர் மேலைநாடுகளில் கல்வி பயின்றபோது புகழ்வாய்ந்த பேராசிரியர் பலருடன் நட்புக் கொண்டிருந்தார். இவர் எழுதிய இந்தியாவின் தேசியப் பங்குவீதம் என்னும் நூல் பொருளாதாரத்தில் சிறந்த நூலாகக் கருதிப் பொருளியல் வல்லுநர்களும் பேராசிரியர்களும் பெரிதும் மதித்துப் போற்றினார்கள். பொருளியலில் பெரும்புலமை பெற்று விளங்கியதால் பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களை அணுகியும் நுணுகியும் ஆராய்ந்து பார்க்க இவரால் இயன்றது. தொழில்துறையில் பொருளாதார வளர்ச்சி அடைவதற்குப் புதியபுதிய கருத்துகளை வெளிப்படுத்தினார்.

**இந்திய வரலாற்றின் புதிய பக்கங்கள்**

புதியன சிந்திப்பதும் படைப்பதுமே புத்துலகம் சமைக்கும் சிற்பிகளின் நோக்கம். இந்திய நாட்டின் சாதி என்னும் இருளை அகற்ற வந்த அறிவுக்கதிர் அம்பேத்கர். சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியதன்று. சில குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஆட்பட்ட மனித சமூகவாழ்வில் தானாகவே வேரூன்றிவிட்ட வளர்ச்சியாகும். சாதி களையப்பட வேண்டிய களை என்று அவர் கருதினார்.

சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது என்றார் அம்பேத்கர். 'இந்தியப் பொருளாதார மேம்பாட்டிற்குச் சாதி என்பது நன்மை தராது. இந்தியர்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் சாதி என்னும் நோய் தீங்கு விளைவிக்கின்றது. அது மக்களிடையே ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்துவிட்டது. இதை அவர்கள் உணரும்படிச் செய்துவிட்டால் போதும். அதுவே எனக்கு நிறைவு தரும்' என்றார் அம்பேத்கர்.

**அண்ணலாரின் இலட்சியச் சமூகம்**

அண்ணல் அம்பேத்கர் சிறந்த இலட்சியவாதி. அவர்,'ஓா இலட்சிய சமூகம் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது' என்றார்.

"சனநாயகத்தின் மறுபெயர்கள் சகோதரத்துவம். சுதந்தரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை. உயிரையும், உடைமையையும் பாதுகாக்கும் உரிமை அது. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும்வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்" என்று சனநாயத்திற்கு அரியதொரு விளக்கம் தந்தார் அம்பேத்கர். சமத்துவத்தின் மறுபெயரே மனிதநேயம். எங்கே சமத்துவம் மறுக்கப்படுகின்றதோ அங்கே மனிதப் பண்பு மறைந்துவிடுவதை அவர் அனைவருக்கும் உணர்த்தினார்.

**பெரியோர் போற்றிய பெருந்தகை**

அம்பேத்கர் ஓர் அறிவுச் சுரங்கம். இவர் அறியாமைக்கு எதிராக ஆற்றிய மகத்தான பணி சான்றோர் நெஞ்சில் நிலைக்கச் செய்தது. "அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர். பகுத்தறிவுச் செம்மல், ஆராய்ச்சியின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி, இப்பெருந்தலைவரைப்போல வேறு யாரையும் நாம் காணமுடியாது" என்று பெரியார் புகழாரம் சூட்டினார்.

'பகுத்தறிவுத் துறையில் அவருக்கு இணை அவரே. ஆசியக் கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும்' என்று அம்பேத்கரை நேரு புகழ்ந்துரைத்தார். "அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர். மிகவும் ஆர்வத்துடனும் வேகத்துடனும் தன்னந் தனியனாகச் செயல்பட்டவர். தமக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர்' என்று இராசேந்திர பிரசாத் பாராட்டியுள்ளார். நாட்டிற்காக அயராது உழைத்த அண்ணல் அம்பேத்கர் 1956 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் ஆறாம் நாள் புகழுடம்பு எய்தினார்.

இந்திய அரசு பாரத ரத்னா எனும் உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு 1981ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

**ஓய்வு**

**- பேரறிஞர் அண்ணா**

**தில்லையாடி வள்ளியம்மை**

- ஆங்கிலேயரின் அடக்குமுறைக் கொடுமைக்கு எதிராக உரிமைக் குரல் எழுப்பிப் போராடியவரின் பெண்
- பெற்றோர் - புதுச்சேரியில் வாழ்ந்த முனுசாமி என்ற நெசவாளி.
  தாயார் - தில்லையாடி என்னும் ஊரில் பிறந்த மங்களம்

NATRAJ INSTITUTE OF TNPSC

- ❖ முனுசாமி நெசவுத் தொழில் பாதிப்பால் வறுமையில் வாடி வேலைதேடி தென் ஆப்பரிக்காவில் குடியேறினார்.
- ❖ வீர மங்கை வள்ளியம்மை 1898 ஆம் ஆண்டு பிறந்தார்.
- ❖ வள்ளியம்மை தென்னாப் பிரிக்காவில் பிறந்தார்.
- ❖ தாயார் தில்லையாடியில் பிறந்ததால் ‘தில்லையாடி வள்ளியம்மை’ என அழைக்கப்படுகின்றது.
- ❖ 1913 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க நாட்டின் திருமணப் பதிவுச் சட்டப் படியும், கிறித்து மதச் சட்டப்படியும் திருமணங்கள் செல்லாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பை வெளியிட்டது.
- ❖ காந்தியடிகள் அறப் போராட்டத்தினைக் தலைமை ஏற்று வழி நடத்தினார்.
- ❖ அறப்போர் போராட்டம் 1913 ஆம் அண்டு திசம்பர்த் திங்கள் 23 ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்றது.
- ❖ சிறைச் சூழலால் உடல் நலம் குன்றிய வள்ளியம்மை 1914 பிப்ரவரி இருபத்திரண்டாம் நாளன்று தமது பதினாறாம் அகவையில் மரணம் அடைந்தார்.
- ❖ ‘நம்பிக்கைதான் அவரது ஆயதம்’ என்ற தில்லையாடி வள்ளியம்மை குறித்து ‘இந்தியன் ஒப்பீனியன்’ இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார்.
- ❖ ‘தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும்’ என்று காந்தியடிகள் தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.
- ❖ காந்தியடிகள், தமிழர் மீதும் தமிழ் மொழியின் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு வள்ளியம்மை காரணம் என்று கூறலாம்.
- ❖ வள்ளியம்மையின் நினைவைப் போற்றும் வகையில் தில்லையாடியில் தமிழ் நாடு அரசு அவரது சிலையை நிறுவியுள்ளது.
- ❖ கோ—ஆப் -டெக்ஸ் என்றழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னையிலுள்ள தனது அறுநூறாவது விற்பனை மையத்திற்குத் ‘தில்லையாடி வள்ளியம்மை மாளிகை’ எனப்பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது.

**இராணி மங்கம்மாள்**

- ❖ காப்பாட்சியாளராக ஆட்சி புரிந்தவர்.
- ❖ மதுரை ஆண்டு வந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி.
- ❖ சொக்கநாத நாயக்கர், இராணி மங்கம்மாள் இவர்களுக்கு பிறந்த மகன் கிருட்டின முத்து வீரப்பன்
- ❖ முத்து வீரப்பன் ஏழாண்டுக்காலம் ஆட்சி செய்து அம்மை நோயால் உலக வாழ்வை நீத்தார்.
- ❖ இராணி மங்கம்மாளின் மருமகளின் பெயர் சின்ன முத்தம்மாள்.
- ❖ அரசியல் பட்டறிவும், ஆட்சிப் பொறுப்பும் இராணி மங்கம்மாளின் மனத்தைக் கல்லாக்கியிருந்தன.
- ❖ இராணி மங்கம்மாள் பெயரன் விசயரங்கச் சொக்க நாதன் பெயரளவில் 1688 ஆம் ஆண்டு அரியணையில் ஏற்றப்பட்டான்.
- ❖ திருவிதாங்கூரின் மன்னர் இரவிவர்மா
- ❖ இராணி மங்கம்மாள் காலத்தில் மைசூர் மன்னன் சிக்கதேவராயன்
- ❖ ‘ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தைக் கைக் கொண்டு வாழவிடுவதே தருமம்’ என்ற கொள்கையே பின்பற்றியவர் மங்கம்மாள்.
- ❖ மங்கம்மாள் மதுரையில் பெரியதொரு அன்னச்சத்திரத்தைக் கட்டினார்.
- ❖ கன்னியாகுமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை, மங்கம்மாள் சாலை என அழைக்கப்படுகிறது.
- ❖ மங்கம்மாள் கட்டியவை மத்தியச் சந்தை, மதுரைக் கல்லூரி, உயர் நிலைப்பள்ளிக் கட்டடம், இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவரின் பழைய அலுவலகம்.
- ❖ மங்கம்மாளின் பெயர் மங்காத புகழோடு விளங்கும்.

NATRAJ INSTITUTE OF TNPSC

**தற்காலத் தொல்லியல் ஆய்வுகள்**

- ❖ திருவண்ணாமலையில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டு.
- ❖ அக்கல்வெட்டுவரிகள், சங்ககால மன்னன் நன்னனையும், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் நூலையும் குறிக்கின்றன.

**நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்**
**வெல்புக ழனைத்தும் மேம்படத் தங்கோன்**
**வாகையும் குரங்கும் விசைய முந்தீட்டிய**
**அடல்புனை நெடுவேல் ஆட்கொண்ட தேவன்**

- ❖ தொல்லியல் அல்லது தொல்பொருளியல்(Archaeology): தொல்பழங்காலத்தைப்பற்றி ஆய்வு செய்தல்.
- ❖ தொன்மையான காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, தொழில்கள், வணிகம், வேளாண்மை, அரசியல், நுண்கலைகள் முதலியவைபற்றி அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்களான கல்வெட்டுகள், கட்டடங்கள், காசுகள், செப்பேடுகள் முதலியவற்றின்

அடிப்படையில் ஆய்ந்தறிதலே தொல்லியலின் முதன்மையான நோக்கம்.

❖ மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் இடம்பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் ஒரு துறைமுக நகரம். அது சோழர்களின் கடற்கரை நகரம். இந்நகரம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

❖ இந்தியத் தொல்லியல் துறையினர் 1963 ஆம் ஆண்டு பூம்புகார் அருகில் உள்ள கீழார்வெளி என்னும் இடத்தில் மேற்கொண்ட கடல் அகழாய்வின்போது கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறியப்பட்டன. இந்த ஆய்வில் செங்கற்களால் கட்டப்பட்ட படகுத் துறை, அரைவட்டவடிவ நீர்த்தேக்கம், புத்தவிஹாரம் (புத்த பிக்குகள் தங்குமிடம்) வெண்கலத்தாலான புத்தர் பாதம் முதலிய எச்சங்கள் கிடைத்தன.

❖ அகழாய்வினைப் பூமியின் மேற்பரப்பினில் மட்டுமன்றிக் குகைகளினுள்ளும் நீருக்கடியிலும் செய்யலாம். நீருக்கடியில் அகழாய்வு செய்வதன் மூலம் இயற்கைச் சீற்றங்களினால் முற்காலத்தில் நீரினுள் மறைந்த நகரங்களையும் துறைமுகங்களையும் பற்றிய அரிய பல செய்திகளை வெளிக்கொணர இயலும்.

**கடற்பயணம்**

❖ 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' – ஔவையார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' – கணியன் பூங்குன்றனார். தமிழர் பிறநாடுகளுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட செய்தி 'முந்நீர் வழக்கம்' எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

❖ தமிழர் வாணிகம் - (மேற்கோ) கிரீசு, உரோம், எகிப்து (கிழக்கோ) சீனம்.

❖ எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா பாபிலோனியா, ஆகிய மேற்காசிய நாடுகளில் ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு விற்கப்பட்டன.

❖ தமிழ்நாட்டில், முத்து, பவளம், ஆரம், அகில், வெண்துகில், சங்கு போன்றவை மிகுதியாகக் கிடைத்தன.

❖ யவனர்கள்- கிரேக்கரையும், உரோமானியரையும் தமிழ் மக்கள் இவ்வாறு அழைத்தனர்.

**கடல் - தமிழ்ச்சொற்கள்** - ஆழி, ஆக்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி.

**மரக்கலம் - தமிழ்ச்சொற்கள்** - கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, ப:்றி, ஓடம்.
**நாவாய்** - பெரிய கப்பல் (பட்டினப்பாலை)
கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கினை அறிந்து கலம் செலுத்தினர் - புறநானூறு.

**துறைமுகங்கள்:**

- முசிறி – சேர நாட்டின் துறைமுகம்
- சுள்ளி எனும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள்.
- யவனர்கள் பொன்னைச் சுமந்து வந்து, அதற்கு ஈடாக மிளகு ஏற்றிச் சென்றனர் - அகநானூறு.

**கொற்கை**

- பாண்டிய நாட்டின் துறைமுகம்
- முத்துக்குளித்தல் நடந்ததென – வெனிசு நாட்டறிஞர் மார்க்கோபோலோ குறிப்பிடுகிறார்.
- முத்து – ஏற்றுமதிப் பொருள் மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை.
- மதுரைக்காஞ்சி – 'விளைந்து முதிர்ந்த விழுமுத்து'.

**காவிரிப்பூம்பட்டிணம் (பூம்புகார்)**

- சோழநாட்டின் துறைமுகம்
- சுங்கச் சாலை கலங்கரை விளக்கம் இருந்தன.
- கப்பலிலிருந்து இதற்கு ஏற்றப்பட அளவிள்ளாத பண்டங்கள் முன்றிலில் மலைபோலக் குவிந்து கிடந்தன.
- கடல் வழியே – குதிரைகள்
- தரை வழியே – மிளகுப் பொதிகள்
- இமயத்திலிருந்து – மணிகள், பொன்
- குடகு மலையிலிருந்து – சந்தனம், பொன்
- கொற்கைத் துறையிலிருந்து – முத்து
- கீழ்க்கடலிலிருந்து – பவளம்
- கங்கையிலிருந்து – பொருள்கள்
- காவிரியிலிருந்து – வளங்கள்
- ஈழநாட்டிலிருந்து – உணவுப்பொருள்கள்

இவை அனைத்தும் மிகுந்து பரந்த இடத்தையுடைய தெருக்களாக விளக்கின.

**ஏற்றுமதிப் பொருள்கள்:**

- இரத்தினம், முத்து, வைரம், மிளகு, ஏலக்காய், இலவங்கம், இஞ்சி, அரிசி, சந்தனம், கருங்காலி, கருமருது, தேக்கு, வெண்துகில்.

**இறக்குமதிப் பொருள்கள்:**

- சீனத்துப்பட்டு, சர்க்கரை, கரும்பு (அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது)

பாரதி – 'மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்.'

NATRAJ INSTITUTE OF TNPSC

**உணவின் இன்றியமையாமை**

- உண்டி முதற்றே உலகு
- உணவு உடலையும் உயிரையும் வளர்க்கும் அமுதமாகும்.
- பசியின் கொடுமையைப் 'பசிப்பிணி என்னும் பாவி' என்றது மணிமேகலைக் காப்பியம்.
- உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனப் புறநானூறும் மணிமேகலையும் கூறுகின்றன.
- திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உணவே மருந்தாகும் தன்மையைத் திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.
- உண்ட உணவு, செரித்த பின்னரே மீண்டும் உண்ணவேண்டுமெனத் தமிழ் மருத்துவம் கூறுகிறது.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின் - குறள்**

உடல் நலத்திற்குப் பொருந்திய உணவு எது? பொருந்தா உணவு எது? என ஆராய்ந்து, தெளிந்து உணவு முறையை வகுத்துக்கொண்டால், உடலுக்கு உறுசெய்யும் நோய்கள் நம்மை அணுகா.

- தமிழகத்து உணவு, மருத்துவமுறையில் வெப்ப நாடான நமது நாட்டுச் சமையலுக்குப் புழுங்கலரிசியே ஏற்றது.
- மஞ்சள், நெஞ்சிலுள்ள சளியை நீக்கும்.
- கொத்துமல்லி, பித்தத்தைப் போக்கும்.
- சீரகம், வயிற்றுச் சூட்டைத்தணிக்கும்.
- மிளகு, தொண்டைக் கட்டைத் தொலைக்கும்.
- பூண்டு, வளியகற்றி வயிற்றுப்பொருமலை நீக்கிப் பசியை மிகுக்கும்.
- வெங்காயம் குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியை தூய்மைப்படுத்தும்.
- பெருங்காயம், வளியை வெளியேற்றும்.
- இஞ்சி, பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும்.
- தேங்காய், நீர்க்கோவையை நீக்கும்.
- கறிவேப்பிலை, மணமூட்டி உணவு விருப்பை உண்டாக்கும்.
- நல்லெண்ணெய் கண் குளிர்ச்சியும் அறிவுத்தெளிவும் உண்டாக்கும்.
- சீரகம் பூண்டு கலந்த மிளகு நீர், சூட்டைத் தணித்துச் செரிமான ஆற்றலை அதிகரிக்கும்.
- உடலுக்கு வலிவூட்டவும் கழிவு அகலவும் கீரை நல்லது.

**தவிர்க்க வேண்டியன**

- நோய்க்கு முதல் காரணம் உப்பு. இதனைக் குறைவாகச் சேர்த்தல் நன்று.
- உப்பு நிறைந்த பொருள்களான ஊறுகாய், அப்பளம், வடாம், கருவாட, முந்திரிப்பருப்பு, வறுத்த உருளைச்சீவல், வாழைக்காய்ச் சீவல், புளித்தமோர் முதலியனவற்றை முழுவதுமாகத் தவிர்த்தல் வேண்டும்.
- கொழுப்பு நிறைந்த இறைச்சிகள், முட்டையின் மஞ்சள் கரு, தயிர், நெய், வெண்ணெய், பாலாடை, பனிக்கூழ், இனிப்புக்கட்டி ஆகியவற்றை நீக்குதல் வேண்டும்.
- காரமும் புளிப்பும் கொண்ட உணவுகள் கூடா.
- எண்ணெயில் வறுத்த, பொரித்த உணவுகளை ஒதுக்குதல் நன்று.
- நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் கேடு என்பது பழமொழி.

**உண்ணும் முறை**

- எளிதில் செரிக்கக் கூடிய பழம், காய், பருப்பு, அரிசி, கோதுமை, பால் இவற்றையே குடல் ஏற்றுக்கொள்கிறது.
- உணவை விரைவாக விழுங்கக்கூடாது. நன்றாக மென்று விழுங்குதல் வேண்டும். அப்போதுதான் வாயிலுள்ள உமிழ்நீர் வேண்டிய அளவு சுரந்து உணவுடன் கலக்கும்
- உணவின் சத்துகள் வீணாகாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். காய்கறிகளை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து உண்ணல் வேண்டும். வேகவைத்த காய்கறி நீரில் மிகுதியான சத்துகள் இருப்பதனால் அதனை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
- நொறுங்கத் தின்றால் நூறு வயது. – பழமொழி

**தண்ணீரும் மருந்தே**

- 'நீரின்றமையாது உலகு' என்பது வள்ளுவம்.
- உண்ட உணவு குருதியுடன் கலப்பதற்கும் குருதி தூய்மை அடைவதற்கும் உடலிலுள்ள கழிவுப்பொருள்கள் வெளியேறுவதற்கும் நீர் இன்றியமையாதது.
- நீரைத் தேவையான (நாளொன்றுக்குக் குறைந்தது 3 லிட்டர்) அளவுக்குக் குடித்தல் உடலுக்கு நல்லது. உணவு உண்ணும்போது இடையில் நீர் குடித்தல் கூடாது.

**சமச்சீர் உணவு**

- ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு.
- சோறும் காய்கறியும் –அரைவயிறு.
  பால், மோர், நீர் - கால்வயிறு
- கால்வயிறு வெற்றிடமாக இருத்தல் வேண்டும்
- வயிறு புடைக்க உண்ணுதல் நோய்க்கு இடமளிக்கும்.
- ஔவையார் மீதூண் விரும்பேல் என்றார்.

NATRAJ INSTITUTE OF TNPSC

- 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' என்பது பழமொழி
- வயது ஏறும்போது கொழுப்புச்சத்துள்ள உணவின் அளவைச் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டே வருதல்வேண்டும்.
- உணவைக் கட்டுப்படுத்துவதோடு எளிய உடற்பயிற்சிகளையும் செய்தல் வேண்டும்.
- நடைப்பயிற்சியே எளிய உடற்பயிற்சி

**காலை மாலை உலாவி நிதம்**
**காற்று வாங்கி வருவோரின்**
**காலைத் தொட்டுக் கும்பிட்டுக்**
**காலன் ஓடிப் போவானே. — கவிமணி**

திருமூலரும் உடலைக் காத்தலின் தேவையை வலியுறுத்தியுள்ளார்.

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே. — திருமூலர்**

அறுசுவையின் பயன்கள்

| | |
|---|---|
| இனிப்பு – வளம் | கார்ப்பு – உணர்வு |
| துவர்ப்பு – ஆற்றல் | உவர்ப்பு – தெளிவு |
| கைப்பு – மென்மை | புளிப்பு – இனிமை |

## நோய் நீக்கும் மூலிகைகள்

- மூலிகை - எளிதில் நமக்கு மிக அருகிலேயே கிடைப்பன.
- மருத்துவப் பயன் மிக்கன.
- இம்மூலிகைகள் எல்லாவித நோய்களையும் நீக்கும் தன்மையுடையன.
- பின்விளைவுகளை ஏற்படுத்துவதில்லை.

### துளசி

- துளிசிச்செடியின் இலைகளை நீரிலிட்டுக் கொதிக்கச் செய்து ஆவிபிடித்தால் மார்புச்சளி, நீர்க்கோவை, தலைவலி நீங்கும்.
- இதன் இலைகளை எலுமிச்சம்பழம் சாற்றுடன் அரைத்துப்போடப் படை நீங்கும்.
- விதைகளைப் பொடி செய்து ஒன்று அல்லது இரண்டு கிராம் அளவு உண்டால் உடற்சூடு, நீரெரிச்சல் ஆகியன அடங்கும்.

### கீழ்க்காய்நெல்லி

- மஞ்சள் காமாலைக்கு எளிய மருந்து.
- காய்களுடன் கூடிய முழுக் கீழாநெல்லிச் செடியைத் தூயநீரில் கழுவி அரைத்து விழுதாக்கிக் கொள்ளுதல் வேண்டும். ஐம்பது கிராம் அளவுள்ள விழுதை இருநூறு மில்லி லிட்டர் எருமைத்தயிருடன் கலந்து காலை ஆறு மணியளவில் வெறும் வயிற்றில் உட்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு மூன்று நாள் தவிராமல் உட்கொண்டால் மஞ்சட்காமாலை நோய் தீரும்.

### தூதுவளை

- **சிங்கவல்லி** — வேறுபெயர்.
- நல்லெண்ணெயில் சமைத்த இதன் இலைகளை உணவோடு சேர்த்து இருபத்தொரு நாள் உண்ட வந்தால் சுவாசகாசம் அகலும்.
- இளைப்பு இருமல் போக்கும்.
- 'ஞானப்பச்சிலை' என வள்ளலார் போற்றும் இவ்விலை குரல்வளத்தை மேம்படுத்தும். வாழ்நாளை நீட்டிக்கும்.

### குப்பைமேனி

- நச்சுக்கடிகளுக்கு மருந்தாக விளங்கும். இலைகளைக் காயவைத்துப் பொடியாக்கிப் பூசினால்,படுக்கைப் புண்குணமாகும்.
- குழந்தைகளின் வயதுக்கேற்ற அளவில் உண்ணக் கொடுத்தால் மலப்புழுக்கல் வெளியேறும். வயிறு தூய்மையாகும்.
- பசியைத் தூண்டும்.
- இலைகளுடன் மஞ்சள், உப்புச் சேர்த்து அரைத்துப் பூசினால் சொறி, சிரங்கு நீங்கும்.
- 'மேனி துலங்க குப்பைமேனி' என்பது பழமொழி.

### கற்றாழை

- நூறு கிராம் அளவு கற்றாழையின் சோற்றுப் பகுதியை எடுத்து நூறு மில்லி நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சித் தலைக்குத் தேய்த்துவர முடி வளரும்.
- இரவில் நல்ல உறக்கம் வரும்.
- மஞ்சள் சேர்த்துக் காயம்பட்ட இடத்தில் பூசினால் காயம் குணமாகும்.
- பசுவின் பாலுடன் சேர்த்துச் சாப்பிட்டால் மூலச்சூடு குறையும்.
- குமரி என்னும் வேறு பெயரும் பெண்களின் கருப்பை சார்ந்த நோய்களை நீக்குவதால் குமரி கண்டநோய்க்குக் குமரி கொடு என்னும் வழக்கு ஏற்பட்டது.

### முருங்கை

- உணவுப்பொருள் மட்டுமன்று. நல்ல மருந்துப் பொருளும்கூட.
- முருங்கைப்பட்டையை அரைத்துத் தடவினால் முறிந்த எலும்பு விரைவில் கூடும். வீக்கத்தைக் குறைக்கும்.
- முருங்கைக்கீரை கண்பார்வையை ஒழுங்குபடுத்தும்.
- உடலை வலுவாக்கும், இரும்புச்சத்து நிறைந்துள்ளதால் கூந்தலை வளரச் செய்வதில் இதற்குப் பெரும்பங்கு உண்டு.

NATRAJ INSTITUTE OF TNPSC

**கறிவேப்பிலை**

- மணத்திற்காக மட்டும் உணவில் சேர்க்கப்படும்.
- ஒரு மண்சட்டியில் முந்நூறு மில்லி அளவு பசுவின்பாலை ஊற்றி வேடு கட்டுதல் வேண்டும். அதன் மீது கறிவேப்பிலையின் காம்பு நீக்கிய கொழுந்து இலைகளைப் போட்டுச் சிறுதீயில் அவித்தல் வேண்டும். அதனை விடக்கடி ஏற்பட்ட இடத்தில் வைத்துக் கட்டினால் மூன்று நாளில் குணமாகும்.
- இருவேளையும் ஐந்து கிராம் கறிவேப்பிலையைக் கழுவிச் சிறிதுசிறிதாக வாயில்போட்டு மென்று விழுங்கினால் சீதபேதி இரண்டு நாளில் குணமாகும்.
- உணவில் சேரும் சிறுநச்சுத்தன்மையை முறிக்கும்.

**கரிசலாங்கண்ணி**

- இரத்தசோகை செரிமானக்கோளாறு, மஞ்சள் காமாலை முதலிய நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.
- கண்பார்வையைத் தெளிவாக்கும்.
- நரையைப் போக்கும்.
- வேறு பெயர்கள்: கரிசாலை, கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம்.

## Others:

1. **மணித்தக்காளிக் கீரை** – வாய்ப்புண்,குடற்புண்ணைக் குணமாக்கும்
2. **முசுமுசுக்கைக் கொடி** - முசுமுசுக்கைக் கொடியின் வேரினைப் பசுவின்பாலில் ஊறவைத்து, உலர்த்திப் பொடியாக்கிப் பசுவின் பால் மிளகுப்பொடி, சருக்கரையுடன் உண்டுவந்தால் இருமல் நீங்கும்.
3. **அகத்திக்கீரை** –பல் சார்ந்த நோய்களைக் குணமாக்கும்.
4. **வல்லாரை** –நினைவாற்றல் பெருக உதவும்
5. **வேப்பங் கொழுந்து** –காலையில் உண்டு வந்தால் மார்புச்சளி நீங்கும். வேப்பிலையை அரைத்துத் தடவினால் அம்மையால் வந்த வெப்புநோய் அகலும்.

NATRAJ INSTITUTE OF TNPSC